**SRIRANGAM SRIMAD ANDAVAN ASHRAMAM**



ஸ்ரீமதாண்டவன் ஸ்ரீ ஸ்ரீநிவாஸ மஹாதேசிகன்
( ஸ்ரீமத் ஆக்கூராண்டவன் )

श्रीमते श्री श्रीनिवास महादेशिकाय नम:

श्रीमद् वेदान्त रामानुज यति नृपतेर् लब्ध वेदान्तयुग्मं

श्रीमद् देवाधिनेतु: चरण सरसिजे तेन दत्तात्मभारं ।

श्रीमद् श्रीवास योगीश्वर महितमहा संप्रदायैकनिष्ठं

वन्दे श्रीवास योगीश्वर गुरुमनघं वत्सलं भव्यशीलं ।।

# ஆச்ரம வரலாறு
# ஸ்ரீமதாண்டவன் ஸ்ரீ ஸ்ரீநிவாஸ மஹாதேசிகன்
# ஸ்ரீமத் ஆக்கூராண்டவன்


**Anugraham**



**Pitadhipathi Srimad Andavan SriVaraha MahaDesikan**


© Srirangam Srimad Andavan Ashramam

Document redesigned and republished using
**Google Translate** and **TT28 Publisher** @ **www.aradhanam.org**


॥ श्रीः ॥
श्रीरङ्गनाथ दिव्यमणि पादुकाभ्यां नमः
ஸ்ரீநிவாஸ மஹாதேசிகன்
(ஆக்கூராண்டவன்)
புரட்டாசி—உத்திரட்டாதி

॥ श्रीः ॥

श्रीरङ्गनाथ दिव्यमणि पादुकाभ्यां नमः



ஸ்ரீமத் வேதாந்த ராமாநுஜ யதி ந்ருபதேர் லப்த வேதாந்தயுக்மம்


ஸ்ரீமத் தேவாதிநேது: சரணஸரஸிஜே தேந தத்தாத்மபாரம் ।

ஸ்ரீமத் ஸ்ரீவாஸ யோகீச்வர மஹிதமஹா ஸம்ப்ரதாயைக நிஷ்டம்

வந்தே ஸ்ரீவாஸ யோகீச்வர குருமநகம் வத்ஸலம் பவ்யசீலம் ॥

॥ ஶ்ரீ: ॥

ஶ்ரீ ரங்கநாத திவ்யமணிபாதுகாப்யாம் நம :



# ஶ்ரீரங்கம் ஶ்ரீமத் ஆண்டவன் ஆச்ரம வரலாறு

வெளியீடு :

**ஶ்ரீரங்கம் ஶ்ரீமத் ஆண்டவன் ஆச்ரமம்**

31, தேசிகாச்சாரி சாலை, மைலாப்பூர், சென்னை=4

**நந்தந ஷு ஆனி மீ 19 உ**

**ப்ரக்ருதம் ஶ்ரீமத் ஶ்ரீமுஷ்ணம் ஆண்டவனின்**

**24 ஆவது சாதுர்மாஸ்ய ஸங்கல்பத்தன்று**

**வெளியிடப்பட்டது.**

**3 - 7 - 2012**

# ஸ்ரீபாஷ்ய கீதாபாஷ்ய குருபரம்பரை

1 ஸ்ரீ பெருமாள்
2 பெரிய பிராட்டியார்
3 விஷ்வக்ஸேநர்
4 நம்மாழ்வார்
5 நாதமுனிகள்
6 உய்யக்கொண்டார்
7 மணக்கால்நம்பி
8 ஆளவந்தார்
9 பெரியநம்பி
10 ஸ்ரீபாஷ்யகாரர்
11 திருக்குருகைப்பிரான் பிள்ளான்
12 ஸ்ரீவிஷ்ணுசித்தர்
13 நடாதூர் அம்மாள்
14 அப்புள்ளார் (ராமானுஜாசாரியார்)
15 ஸ்ரீநிகமாந்தமஹாதேசிகன்
16 ப்ரம்ஹ தந்த்ர ஸ்வதந்த்ர ஸ்வாமி
17 கடிகாஸதம் அம்மாள் என்கிற வரதாசாரியார்
18 ஆதிவண்ஸடகோப ஸ்வாமி
19 வரதவிஷ்ண்வாசாரியர்
20 மஹாதயாதீஸ
21 அஹோபிலாசார்யர்
22 ஷஷ்டபராங்குஸ ஸ்வாமி
23 பஞ்சமதபஞ்ஜநம் தாதாசார்யர்
24 வாத்ஸ்யாநந்தாசார்யர்
25 உபநிஷத்பாஷ்யகாரர்

26 ரங்கநாத ஸ்வாமி
27 வீரராகவாசார்யர்
28 ஸ்ரீரங்கபதி தேஶிகர்
29 கல்யாணாவஹ ரங்நாத ஸ்வாமி
30 ஸாக்ஷாத் ஸ்வாமி
31 திருக்குடந்தை தேஶிகன்
32 ஸ்ரீ வழுத்தூர் ஆண்டவன்
33 திருத்துறைப்பூண்டி ஆண்டவன்
34 பெரியாண்டவன்
35 சின்னாண்டவன்
36 காடந்தேத்தி ஆண்டவன்
37 தேரழுந்தூர் ஆண்டவன்
38 ஆக்கூர் ஆண்டவன்
39 தென்பரை ஆண்டவன்
40 திருக்குடந்தை ஆண்டவன்
41 மைஸூர் ஆண்டவன்
42 ஸ்ரீமுஷ்ணம் ஆண்டவன்

ஸ்ரீரஹஸ்ய பரம்பரை

1 ஸ்ரீ பெருமாள்
2 பெரிய பிராட்டியார்
3 விஷ்வக்ஸேநர்
4 நம்மாழ்வார்
5 நாதமுனிகள்
6 உய்யக்கொண்டார்

7 மணக்கால்நம்பி

8 ஆளவந்தார்

9 பெரியநம்பி

10 ஸ்ரீபாஷ்யகாரர்

11 (மடைப்பள்ளிஆச்சான்) ப்ரணதார்த்திஹராசார்யர்

12 ஆத்ரேய ராமானுஜாசார்யர்

13 ஆத்ரேய ரங்கராஜாசார்யர்

14 அப்புள்ளார் (ராமானுஜாசாரியார்)

15 ஸ்ரீநிகமாந்தமஹாதேசிகன்

16 ப்ரம்ஹ தந்த்ர ஸ்வதந்த்ர ஸ்வாமி

17 கடிகாஶதம் அம்மாள் என்கிற வரதாசாரியார்

18 வரத விஷ்ணவாசார்யர்

19 மஹாதயாதீஶர்

20 அஹோபிலாசார்யர்

21 வாத்ஸ்ய வரதாசார்யர்

22 ஷஷ்டபராங்குஸ ஸ்வாமி

23 பஞ்மதபஞ்சநம் தாதாசார்யர்

24 வாத்ஸ்யாநந்தாசார்யர்

25 ராமானுஜசார்யர்

26 வாத்ஸ்யவேங்கடேஶாசார்யர்

27 வீரராகவாசார்யர்

28 ஸ்ரீரங்கபதி தேஶிகர்

29 கல்யாணாவஹ ரங்கநாத ஸ்வாமி

30 ஸாக்ஷாத் ஸ்வாமி

31 திருக்குடந்தை தேஶிகன்

32 ஸ்ரீ வழுத்தூர் ஆண்டவன்

33 திருத்துறைப்பூண்டி ஆண்டவன்

34 பெரியாண்டவன்

35 சின்னாண்டவன்

36 காடந்தேத்தி ஆண்டவன்

37 தேரழுந்தூர் ஆண்டவன்

38 ஆக்கூர் ஆண்டவன்

39 தென்பரை ஆண்டவன்

40 திருக்குடந்தை ஆண்டவன்

41 மைஸூர் ஆண்டவன்

42 ஸ்ரீமுஷ்ணம் ஆண்டவன்

ஸ்ரீபகவத்விஷய பரம்பரை

1 ஸ்ரீ பெருமாள்

2 பெரிய பிராட்டியார்

3 விஷ்வக்ஸேநர்

4 நம்மாழ்வார்

5 நாதமுனிகள்

6 உய்யக்கொண்டார்

7 மணக்கால்நம்பி

8 ஆளவந்தார்

9 திருமாலையாண்டான்

10 ஸ்ரீபாஷ்யகாரர்

11 திருக்குருகைப்பிரான் பிள்ளான்

12 ஸ்ரீவிஷ்ணுசித்தர்

13 நடாதூர் அம்மாள்

14 அப்புள்ளார்
15 ஸ்ரீநிகமாந்தமஹாதேசிகன்
16 நயினாராசார்யர்
17 ப்ரம்ஹ தந்த்ர ஸ்வதந்த்ர ஸ்வாமி
18 கடிகாஶதம் அம்மாள் என்கிற வரதாசாரியார்
19 ஆதிவண்ஶடகோபர்
20 த்ருதீய பராங்குஶ ஸ்வாமி
21 ஷஷ்டபராங்குஶ ஸ்வாமி
22 வங்கீபுரம் ஸ்ரீநிவாஸாசார்யர்
23 ஸ்ரீஶைல ஸ்ரீநிவாஸாசார்யர்
24 வாத்ஸ்யாநந்தாசார்யர்
25 முநிவாஹந ஸ்வாமி
26 சந்த்ரகிரி வேங்கடாசாரியர்
27 கல்யாணாவஹ ரங்கநாத ஸ்வாமி
28 ஸாக்ஷாத் ஸ்வாமி
29 பாதுகாஸேவகராமானுஜ ஸ்வாமி
30 திருக்குடந்தை தேஶிகன்
31 ஸ்ரீ வழுத்தூர் ஆண்டவன்
32 திருத்துறைப்பூண்டி ஆண்டவன்
33 பெரியாண்டவன்
34 சின்னாண்டவன்
35 காடந்தேத்தி ஆண்டவன்
36 தேரழுந்தூர் ஆண்டவன்
37 ஆக்கூர் ஆண்டவன்
38 தென்பரை ஆண்டவன்
39 திருக்குடந்தை ஆண்டவன்

40 மைஸூர் ஆண்டவன்

41 ஸ்ரீமுஷ்ணம் ஆண்டவன்

ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் பரம்பரையில் ஆசார்யர்களின் சுருக்கமான விவரங்கள்.

## ஸ்ரீமத் வழுத்தூர் ஆண்டவன்

வேதாந்த ராமானுஜ மஹாதேஶிகன்: அவதாரம் - மாடபூசி நைத்ருவ காஶ்யப கோத்ரத்தில் ஸ்ரீநிவாஸாசார்யரின் திருக்குமாரராக 1743 ருதிரோத்காரி ஆவணி பூரட்டாதியில். ப்ரம்ஹசர்யத்தி லிருந்து ஸந்யாஸாஸ்ரமம். ஸந்யாஸம் ஸ்ரீ பாதுகாஸேவக ராமானுஜ மஹாதேஶிகனிடம். காலக்ஷேபம் ஸ்ரீமத் திருக்குடந்தை தேசிகனிடம். ப்ரபத்தி ஆசார்யர் திருக்குடந்தை தேசிகன். ஆராவமுதாழ்வான் திருவடிகளில் ப்ரபத்தி. 72 திருநக்ஷத்ரங்களுக்கு மேலும் எழுந்தருளியிருந்ததாகவும், சுமார் 52 சாதுர்மாஸ்யங்கள் அனுஷ்டித்துள்ளதாகவும் தெரிகிறது.

## ஸ்ரீமத் திருத்துறைப்பூண்டி ஆண்டவன்

ஸ்ரீமத் ஸ்ரீநிவாஸராமானுஜ மஹாதேஶிகன் .அவதாரம் விளக்குடி க்ராமம். ஈயுண்ணி பாரத்வாஜ வம்ஸம். ஐப்பசி உத்திரட்டாதி. வேதாந்த காலக்ஷேபம், ப்ரபத்தி, ஸந்யாஸம் எல்லாம் வழுத்தூர் ஆண்டவன் திருவடிகளில்.

## பெரியாண்டவன்:

ஸ்ரீநிவாஸ ஸ்ரீமத் மஹாதேஶிகன். பூர்விகம் காஞ்சீபுரம் அருகில் பிலியரணை எனும் ஸ்ரீக்ராமம். அவதாரம் : காஞ்சீபுரத்தில் ஶாண்டில்ய கோத்ரம் பகல் தீவட்டி (திவா

ப்ரதீபம்) ஸ்ரீ க்ருஷ்ணமாசார்யருக்கு திருக்குமாரராக. 25.2.1801 கலி 4900 ரௌத்ரி மாசி புஷ்யம் . அவதாரத் திருநாமம் ஸ்ரீநிவாஸ ராகவாசார்யர். ஸமாஸ்ரயணம் ஸாமா பெரியப்பன் ஸ்வாமியிடம். ப்ரபத்தி ஸ்ரீமத் வழுத்தூர் ஆண்டவன் திருவடிகளில் ஸ்ரீரங்கம் பெரிய பெருமாள் ஸன்னிதியில். வேதாந்த காலக்ஷேபம், 30 திருநக்ஷத்ரத்தில் பூண்டி ஆஸ்ரம ஸ்வீகாரம் ஸ்ரீ திருத்துறைப் ஆண்டவனிடம். 54 சாதுர்மாஸ்யங்கள் அனுஷ்டித்து 1884 ல் தைமாதம் க்ருஷ்ணபக்ஷ த்ரயோதசியில் அவதார ஸமாப்தி. ப்ருந்தாவனம் ஸ்ரீரங்கம் பெரியாஸ்ரமம்.

## ஸ்ரீமத் சின்னாண்டவன்

ஸ்ரீ பாதுகாஸேவக ராமானுஜ மஹாதேஶிகன். அவதாரம் - வேளியநல்லூர் ஸங்கபுரம் ஶடமர்ஷண கோத்ரம் ஸ்ரீ க்ருஷ்ண தாதாசார்யருக்கு திருக்குமாரராக. 1826 விய வர்ஷம் கார்த்திகை மகம். அவதாரத் திருநாமம் ஸ்ரீநிவாஸராகவாசார்யர். காலக்ஷேபம், ப்ரபத்தி, ஸந்யாஸம் எல்லாம் ஸ்ரீமத் பெரியாண்டவனிடம். ப்ரபத்தி ஸ்ரீரங்கம் பெரிய பெருமாள் சன்னிதியில். ஸந்யாஸம் 1883 சுபானு ஐப்பசி மாதம். பத்து சாதுர்மாஸ்யங்கள் அனுஷ்டித்து 68 ஆம் திருநக்ஷத்ரத்தில் 1894 விஜய வர்ஷம் தை சுக்ல சப்தமியில் அவதார ஸமாப்தி. ப்ருந்தாவனம் ஸ்ரீரங்கம் சின்னாஸ்ரமம்.

## ஸ்ரீமத் காடந்தேத்தி ஆண்டவன்

ஸ்ரீநிவாஸ ராமானுஜ மஹாதேஶிகன். அவதாரம் காடந்தேத்தி ரகுநாதாசார்யருக்கும் ஜானகி அம்மாளுக்குக்கும்

திருக்குமாரராக 1829 விரோதி வர்ஷம் ஆவணி மூலம்.அவதாரத் திருநாமம் வரதவேதாந்தாசார்யர். வேதாந்த காலக்ஷேபம் பெரியாண்டவனிடம். ப்ரபத்தி பெரியாண்டவனால் பெரியபெருமாளிடத்தில். 1905 ல் விஸ்வாவஸு வர்ஷம் ஆவணி மாதம் 76 திருநக்ஷத்ரத்தில் ஸந்யாஸம் 38 ஆம் பட்டம் திருக்குடந்தை அழகிய சிங்கரிடம். 1909 கீலக மாசி க்ருஷ்ணபக்ஷ த்வாதசியன்று அவதார ஸமாப்தி. ப்ருந்தாவனம் ஸ்ரீரங்கம் சின்னாஸ்ரமத்தில்.

## ஸ்ரீமத் தேரழுந்தூர் ஆண்டவன்

ஸ்ரீ வேதாந்த ராமானுஜ மஹாதேஶிகன். அவதாரம் தேரழுந்தூர் ஈயுண்ணி பாரத்வாஜ கோத்ரம் ஸ்ரீநிவாஸாசார்யருக்கு திருக்குமாரராக 1872 ப்ரஜோத்பத்தி ஆவணி பூரட்டாதி . ஸமாஸ்ரயணம் பெரியாண்டவனிடம். வேதாந்த காலக்ஷேபம் ப்ரபத்தியும் சின்னாண்டவனிடம். சின்னாண்டவன் திருவடிகளில். ஸந்யாஸம் 36 திருநக்ஷத்ரத்தில் 1908 ல் கீலக வர்ஷம் ஆவணி மாதம் ஸ்ரீ காடந்தேத்தி ஆண்டவனிடமிருந்து. 39 ஆம் பட்டம் ஸ்ரீ மன்னார்குடி அழகிய சிங்கருக்கு ஸந்யாஸாஸ்ரமம் கொடுத்து அனுக்ரஹித்தார். 23 சாதுர்மாஸ்யங்கள் அனுஷ்டித்து 60 ஆம் திருநக்ஷத்ரத்தில் 1932 ல் ஆடி க்ருஷ்ண பஞ்சமியில் ப்ரஜோத்பத்தி திருநாடலங்கரித்தாயிற்று. ப்ருந்தாவனம் காஞ்சீபுரம் பாதுகாஸ்ரமத்தில்.

## ஸ்ரீமத் ஆக்கூர் ஆண்டவன் :

ஸ்ரீநிவாஸ மஹாதேஶிகன். அவதாரம் மௌத்கல்ய கோத்ரம் ஆக்கூர் ஸ்ரீநிவாஸாசார்யருக்கு 1880 விக்ரம வர்ஷம் புரட்டாசி உத்ரட்டாதி. பூர்வாஸ்ரம திருநாமம் ரங்கநாதாசார்யர். பஞ்ச ஸம்ஸ்காரம் தம் மாதுலரிடத்தில் . வேதாந்த காலக்ஷேபம் தேரழுந்தூர் ஆண்டவனிடம். ப்ரபத்தி ஸ்ரீ தேரழுந்தூர் ஆண்டவனால் ஸ்ரீ தேவப் பெருமாள் திருவடிகளில், ஸ்ரீ தேரழுந்தூர் ஆண்டவனிடம் ஸந்யாஸம் ஸ்வீகரித்திருந்த திருக்குடந்தை நாராயண யதியினிடத்தில் 1932 ல் ஸ்ரீரங்கம் ஆஸ்ரமத்தில் ஸந்யாஸம். 17 சாதுர்மாஸ்யங்கள் அனுஷ்டித்தாயிற்று. 1947 ல் விய வர்ஷம் பங்குனிக்ருஷ்ணத்வாதசியில் 19.3.1947 அவதார ஸமாப்தி. ப்ருந்தாவனம் ஸ்ரீரங்கம் சின்னாஸ்ரமத்தில்.

## ஸ்ரீமத் தென்பரை ஆண்டவன்

ரங்கநாதமஹாதேஶிகன். அவதாரம் தென்பரை வங்கீபுரம் பாரத்வாஜம் சேஷாத்ரியாசார்யருக்கும் செங்கமலத்தம்மாளுக்கும் திருக்குமாரராக 19.8.1886 விய வர்ஷம் ஆவணி ரேவதியில். அவதாரத் திருநாமம் வேங்கட ராகவாசார்யர். வேதாந்த காலக்ஷேபம் ஸ்ரீ தேரழுந்தூர் ஆண்டவனிடம். தேரழுந்தூர் ஆண்டவனால் ஸ்ரீ வடுவூர் சக்ரவர்த்தித் திருமகன் திருவடிகளில் ப்ரபத்தி. ஸன்யாஸம் ஸ்ரீ ஆக்கூர் ஆண்டவனிடமிருந்து 6.10.1946 விய வர்ஷம் ஐப்பசி 21 சுக்ல த்வாதசி யன்று. 15 சாதுர்மாஸ்யங்கள் அனுஷ்டித்து 5.4.1963 ல் சுபக்ருத் பங்குனி சுக்ல த்வாதசியில் 76 திருநக்ஷத்ரத்தில் தமக்கு அடுத்த ஆசார்யர் ஸ்ரீ திருக்குடந்தை ஆண்டவனுக்கு ஸ்தானம் அருளின அன்றே

திருநாடலங்கரித்தபடி. ப்ருந்தாவனம் ஸ்ரீரங்கம் சின்னாஸ்ரமத்தில்.

## ஸ்ரீமத் திருக்குடந்தை ஆண்டவன்

ஸ்ரீ வேதாந்தராமானுஜ மஹாதேசிகன். அவதாரம் ஆத்ரேய கிடாம்பி திருக்குடந்தை ஸ்ரீ பத்மநாபாசார்யர் கோமளவல்லி தம்பதிக்கு 1907 பராபவ பங்குனி புஷ்யம் அன்று அம்மான் க்ருஹம் ராயம்பேட்டை க்ராமம் காருகுடி அக்ரஹாரத்தில். அவதாரத் திருநாமம் ஸ்ரீநிவாஸ ராகவாசார்யர். இவரை ஸ்ரீ கண்ணன் ஸ்வாமி என்று அழைப்பர். ஸ்ரீமத்ரஹஸ்யத்ரய ஸாரம், பகவத் விஷயம், கீதாபாஷ்யம் காலக்ஷேபம் ஸ்ரீதேரழுந்தூர் ஆண்டவன் திருவடிவாரத்தில். ஸ்ரீபாஷ்யாதிகள் ஸ்ரீ ஆக்கூர் ஆண்டவன் திருவடிவாரத்தில் . ப்ரபத்தி ஸ்ரீ ஆக்கூர் ஆண்டவனால் ஆராவமுதாழ்வான் திருவடிகளில். ~~ 5.4.1963 சுபக்ருத் பங்குனி சுக்ல த்வாதசியன்று 56 திருநக்ஷத்ரத்தில். 26 சாதுர்மாஸ்யங்கள் அனுஷ்டித்து 10.4.1989 விபவ வர்ஷம் பங்குனி சுக்ல பஞ்சமியில் திருநாடலங்கரித்தாயிற்று. ப்ருந்தாவனம் ஸ்ரீரங்கம் பெரியாஸ்ரமத்தில்.

## ஸ்ரீமத் மைஸூர் ஆண்டவன்

ஸ்ரீ ஸ்ரீநிவாஸராமானுஜ மஹாதேசிகன். அவதாரம் கௌண்டின்ய கோத்ரம் ஹரிஹரபுரம் ஸ்ரீ க்ருஷ்ணமாசார்யர் ஸ்ரீ ரங்கநாயகம்மா தம்பதிக்கு 19.8.1909 ஸௌம்ய ஆவணி மாதம் உத்தரம் திருநக்ஷத்ரத்தில் ஸோஸலை க்ராமத்தில். அவதாரத் திருநாமம் கோபாலாசார்யர். ஸமாஸ்ரயணமும்

ப்ரபத்தியும் 14 திருநக்ஷத்ரத்தில் ஸ்ரீ தேரழுந்தூர் ஆண்டவன் திருவடிகளில். வேதாந்த காலக்ஷேபம் ஸ்ரீஆக்கூர் ஆண்டவன் திருவடிகளில். 11.4.1988 ப்ரபவ வர்ஷம் பங்குனி மாதம் ஸ்ரீ திருக்குடந்தை ஆண்டவனிடமிருந்து ஸந்யாஸம். ஒரு சாதுர்மாஸ்யம். 22.5.1989 வைகாசி க்ருஷ்ண த்விதீயை அன்று திருநாடலங்கரித்தபடி. ப்ருந்தாவனம் ஸ்ரீரங்கம் சின்னாஸ்ரமம்.

## ஸ்ரீமத் ஸ்ரீமுஷ்ணம் ஆண்டவன்

ஸ்ரீரங்கராமானுஜ மஹாதேசரிகன். அவதாரம் பாரத்வாஜம் ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீநிவாஸாசார்யருக்கு திருக்குமாரராய் திருவஹீந்த்ரபுரத்தில் 1935 யுவ வர்ஷம் வைகாசி திருவாதிரையில். பூர்வாஸ்ரமத் திருநாமம் ஸ்ரீ பூவராஹாசார்யர். திருத்தகப்பனாரிடம் ஸமாஸ்ரயணம். வேதாந்த காலக்ஷேபம், ப்ரபத்தி, ப்ரேஷ மந்த்ரம் ஸ்ரீ திருக்குடந்தை ஆண்டவன் திருவடிகளில். ஸந்யாஸாஸ்ரம ஸ்வீகாரம் ஸ்ரீ பெரியாண்டவன் ப்ருந்தாவனத்திலிருந்து 1.6.1989 விபவ வைகாசி மாதம் க்ருஷ்ண த்வாதசி . 23 சாதுர்மாஸ்யங்கள் அனுஷ்டித்துள்ளபடி.

॥ ஸ்ரீ: ॥

ஸ்ரீமதே ரங்கராமானுஜ மஹாதேஶிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீநிவாஸராமானுஜ மஹாதேஶிகாய நம:
ஸ்ரீமதே வேதாந்த ராமாநுஜ மஹாதேஶிகாய நம:
ஸ்ரீமதே ரங்கநாத மஹாதேஶிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீநிவாஸ மஹாதேஶிகாய நம:
ஸ்ரீமதே வேதாந்த ராமாநுஜ மஹாதேஶிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீநிவாஸராமானுஜ மஹாதேஶிகாய நம:
ஸ்ரீமதே பாதுகாஸேவக ராமாநுஜ மஹாதேஶிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீநிவாஸ மஹாதேஶிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீநிவாஸராமானுஜ மஹாதேஶிகாய நம:
ஸ்ரீமதே வேதாந்த ராமாநுஜ மஹாதேஶிகாய நம:
ஸ்ரீரங்கநாத திவ்யமணி பாதுகாப்யாம் நம:

## ஸ்ரீமதாண்டவன் ஆச்ரமம்

நாமெல்லாரும் ஸ்ரீ வைஷ்ணவர்கள் எனப்படுகிறோம். விஷ்ணு என்றால் உடலுள் உயிர் போல் திடவிசும்பு எரி வளி நீர்நிலம் இவைமிசை... உடல்மிசை உயிரெனக் கரந்து எங்கும் பரந்துளன் .. என்கிறபடி, எல்லாவற்றையும் வ்யாபித்தும் தரித்தும் நியமித்தும் இதுகளால் வரும் பெருமையை அடைந்து சேஷியாயும் ஸ்வாமியாயும் ஆத்மாவுமாகவும் இருப்பவன். நாமெல்லோரும் அவனால் தார்யர்களாயும் நியாம்யர்களாயும் சேஷராயும் தாஸர்களாயும் இருப்பதால் அவனுக்குச் சரீரமெனப்படுவோம். விஷ்ணோ: இமே... வைஷ்ணவா: என்று சரீர சரீரிபாவ ஸம்பந்தமுடையவர்கள்.

இன்னும் நமக்கு விஷ்ணுவே மாதா பிதா என்கிறபடி விஷ்ணுவுடன் பல சம்பந்தமுடையவர்கள் வைஷ்ணவர்கள். விசிஷ்டாத்வைத மதத்தில் ப்ரஹ்மம் என்று சொல்லப்படுபவனும் நாராயணனே. நமக்கு இவனே ஈஸ்வரன், ஸ்வாமி, பரதேவதை. இந்த மதத்தில் ஈஸ்வரன் என்பதுபோல் ஈஸ்வரி என்றும் சொல்லப்படுகிறபடியால், நமக்குத் தாயார் மஹாலக்ஷ்மி இருவர்களும் யஜமானர் யஜமானிகள். தாய்தந்தைகள் குழந்தைகளை ரக்ஷிப்பதற்கும் நாம் அவர்களை அவர்களிஷ்டப்படி பெருமைப் படுத்தவும், கார்யம் செய்வதற்கும் கடமைப்பட்டிருக்கிறோம். அவைகளை நாம் இப்பொழுது செய்து கொண்டிருக்கவில்லை. அநாதியாய் நாம் செய்த அபராதத்தால் கோபம் கொண்ட ராஜாவாய் இருக்கும் தகப்பன், தப்புச் செய்யம் பிள்ளைகளை அவர்களின் நன்மைக்காக சிறைச் சாலையில் போடுவதுபோல் நம்மை இந்த ப்ரக்ருதி மண்டலத்தில் தள்ளியிருக்கிறான். இந்தப் பாழும் ப்ரக்ருதியோ உள்ள ஸ்வரூபத்தை மறைத்தும், விபரீத ஜ்ஞானத்தை விளைவித்தும் தன் விஷயத்தில் போக்கியதையை உண்டுபண்ணக் கூடியது. அதனுடைய சம்பந்தத்தால் நாம் ஸ்வரூபத்தை மறந்து நமக்கு கர்ம லப்தங்களான தேஹங்களில் போக்யத்வ புத்தியை உண்டுபண்ணிக் கொண்டு இந்த ஸம்ஸாரத்தில் பிறப்பும் இறப்பும் உள்ளவர்களாய் இருந்து கொண்டு கரை ஏற வழி தெரியாதவர்களாக இருக்கிறோம்.

நாம் இப்படியிருந்தும் பரம காருணிகனாயும் குடல் துவக்கு (சம்பந்த) முள்ளவனுமான ஸர்வேஶ்வரன் கெட்ட

பிள்ளைகளை நல்ல வழி நடத்தப் பாடுபடுவதுபோல் நாம் அறியாமல் செய்த தப்புகளைத் தள்ளியும் மற்றவைகளை மன்னித்தும், அஜ்ஞாதமாகவும், யாத்ருச்சிகமாகவும், ப்ராஸங்கிகமாகவும் நேர்ந்தவைகளுமான சுக்ருதங்களை முன்னிட்டு இந்த நல்ல ஜன்மத்தைக் கொடுத்ததுபோல் நற்கதியை அளிக்கவும் வழி பண்ணுகிறான்.

இந்த ஸம்ஸார மென்பது எட்டிமரம் போல் அண்டினவனை அழியச் செய்யக் கூடியது. அதிலும் பிழைப்பிக்கும் பழம் இரண்டு. ஒன்று பகவத்பக்தி. இன்னொன்று ஸத்ஸங்கம். ஸத்ஸங்கத்தை மோக்ஷவாசலாய்ச் சொல்லுவார். அந்த ஸத்ஸங்கத்தை உண்டுபண்ணியும் அந்த ஸத்துக்களிடம் அத்வேஷம், ஆபிமுக்யம், சம்பாஷணம் இவைகளையும் உண்டுபண்ணி நல்ல ஆசார்யர்களை அடைவிப்பிக்கிறான்.

ஆசார்யர்கள் என்பவர்கள் பகவதவதாரங்களே. முன் யுகங்களில் ஹிரண்யகசிபு ராவணாதிகள் போன்றவர் தேஹபலத்தால் சாதுக்களை ஹிம்ஸித்து வந்தார்கள். இந்த யுகத்தில் அவர்களைப் போன்றவர்கள், புத்தி பலத்தால் வேதபாஹ்யர்களாயும் வேதத்துக்குச் சரியான அர்த்தம் தெரியாதவர்களாயும் பிறந்து, கெட்ட மதங்களை உண்டுபண்ணி நம் புத்தியைக் கெடுப்பார்கள். காணாதாள், சாக்கியாள், பாஷண்டாள், இவர்களால் வேதமார்க்கம் முன்பு அழிக்கப்பட்டது. அவர்களைப் பகவான் திரிதண்ட தாரியாய் தத்தாத்ரேயராய் அவதரித்து அந்த மதங்களை நிரஸித்து அந்த வேதமார்க்கத்தை ரக்ஷித்தார். இன்னும் கிணற்றில் விழுந்த குழந்தையைக் கையால் எடுப்பதுபோல், ஸம்ஸாரத்தில்

விழுந்த நம்மை சாஸ்த்ரமென்கிற கையால் எடுப்பதற்காக பல ஆசார்யர்கள் ரூபியாக அவதரித்தவன்.

இப்படி அவதரித்தும் நாம் ஏற்கனவே கொடுத்த வேதம் சாஸ்த்ரம் முதலியவை விஸ்தாரமுள்ளன. இவர்களோ அல்பஞர்கள். அல்ப சக்திகள், அல்ப ஆயுஸ் உள்ளவர்கள். அதற்காக அந்த வேதங்களுக்குள் ஒன்றான அதர்வ வேதத்தின் பிரஸான உபநிஷத்தில் பிரியச் சொல்லி, ஒன்றாகச் சேர்க்கப்பட்ட அஷ்டாக்ஷரம் என்னும் மந்த்ரத்தை நரநாராயண ரூபியாய் அவதரித்து குரு சிஷ்ய ரூபியாய் உபதேசிதது நாரதாதிகளையிட்டுப் பரவச் செய்தான். இம்மந்த்ரம் சிறிய கண்ணாடி பெரிய உருக்களைக் காட்டுவதுபோல் நாம் அறியவேண்டிய எல்லாச் சங்கதிகளையும் காட்டக் கூடியது. இதனால் ஸ்வரூப ஜ்ஞானம் தெரிந்து நமக்கு வேண்டிய புருஷார்த்தத்தையும் அதற்கு வேண்டிய மார்க்கத்தைத் தெரிந்து அனுஷ்டிக்க வேண்டியதற்காக பாஞ்சராத்ராதிகளில் சொல்லப் பட்டிருக்கும் த்வயம், கீதையில் உபதேசிக்கப்பட்டுள்ள சரம ஶ்லோகம், ஆக இந்த மூன்று மந்த்ரங்களையும் ஸத்குருவை அடைந்து உபதேசம் பெற்றுக்கொள்ள வேண்டியது. இப்படிப் பெற்றாலும் நமக்கு நல்ல புத்தி உண்டாவது கஷ்டம்.

ஏனெனில் நாம் பூர்வ ஜன்மங்களில் ஆசுர ஸ்வபாவத்தை அடைந்து பகவத் த்விட்டுகளாயிருந்த படியால் நம்மை நரகாதிகளில் தள்ளியும் இவர்கள் நம்மை அறியக் கடவர்களில்லை, இவர்கள் நம்மை வசீகரிக்க கடவர்களில்லை, என்று ஈஸ்வரன் பூர்வாபராதத்தால் இட்ட நினைப்பு

ஈடுமாறுவதற்காக அஸ்துமே.. என்றால் அஸ்துதே, தயைவ ஸர்வம் ஸம்பத்ஸ்யதே,.. என்ற திருமுகப் பாசுரமும் ஸதாசார்யன் அனுக்ரஹமும் ஸத்ஸம்ப்ரதாய ஸித்தி என்றும் மூன்று ப்ரதான காரணங்கள்.

தாயார் கடாக்ஷமில்லாவிடில் நல்ல புத்தி, நல்ல நடவடிக்கை உண்டாகாது. ஆதலால் அவள் கடாக்ஷம் வேணும். கூடியவரையில் ஸாத்விகர்களாயும் ஆவச்யக விஷயத்தில் ஞானக் குறைவு இல்லாதவர்களும், டம்பம் அசூயை ஏமாற்றல் இவைகள் இல்லாதவர்களுமான நல்ல ஆசார்யர்கள் இவனுக்கு நல்ல க்ஷேமங்கள் உண்டாக வேண்டுமென்று அவர்கள் நினைப்பதாகிற அனுக்ரஹமும் வேண்டும். பிறகு, தான் ஸத்வோத்தரனாய் ஸம்யகுபஸந்நனாய் ஸாவதானனுமாய் இருக்கும் அவஸ்தையில் க்யாதி லாப பூஜா நிரபேக்ஷகர்களாய்ப் பரமகாருணிகர்களான ஸதாசார்யர்கள் அநபேக்ஷித விஸ்தரமும் அபேக்ஷித ஸங்கோசமும் இல்லாதபடி ஸர்வலோகங்களுக்கும் பிதாவும் மாதாவுமாயிருக்கும் ஸ்ரிய:பதி நாராயணன் அவன் எல்லாரையும் காக்கும் இயல்பினன் என்றபடி சரண்ய பூதன், அவனையே சரணமடையுங்களென்று சாதிக்கும் சுருங்கிய உபதேசத்தையும் பெற வேண்டும். இப்படி நாம் குரூபதேசத்தைப் பெற்றால்தான் நமக்கு நன்மை விளையும்.

அவர்கள் நமக்கு உபதேசம் பண்ணும் போது, முன்பு ஜன்மத்தால் ஸூத்ரனாய் பிறந்து ப்ரஹ்மோபதேச மென்ற கர்மத்தால் ப்ராஹ்மணனாக ஆகியிருக்கும் நம்மை ப்ரஹ்மோபதேசத்துக்கு முன்பு ஜாதகர்மம், நாமகரணம்

அன்னப்ராசனம், சௌளம், உபநயனம் என்கிற கர்மங்களால் ஸம்ஸ்கரிக்கப் பட்டிருப்பதுபோல் காயத்ரியிலும் பெரியதும் ஸகல வேதம் முதலியவைகளை தன்னிடம் அடக்கிக் கொண்டுள்ளதும் அதை ஜபிப்பதால் அசூயை முதலிய ஆந்தர வ்யாதிகளையும் ஜ்வரம் முதலிய பஹிர்வ்யாதிகளையும் ஸ்வரூப ஜ்ஞானமில்லாமையாகிற பஞ்சத்தையும் பணப் பஞ்சத்தையும் 'நான், என்னுடையது' என்கிற அஹங்கார ஆத்மாபஹார சௌர்யாதிகளையும் போக்கி, தேஹாத்ம விவேகம், ஆத்ம பரமாத்ம விவேகம் ஆகியவற்றை தரக் கூடியதுமான உபதேசத்தை சிஷ்யன் பெறுவதற்குத் தகுதியாக தாபம், புண்ட்ரம், நாம, மந்த்ரம், யாகம் என்கிற ஐந்து ஸம்ஸ்காரங்களையும் செய்வித்து, உபதேசிக்க வேணும்.

தாப மென்றால், நாம் ஸத்வம், ரஜஸ், தமஸ் என்று மூன்று குணமுள்ள ப்ராக்ருத தேஹமுடையவர்கள். பரமாத்மா விஷயமான பவித்ரமான பஞ்சோபநிஷந் மந்த்ரங்களால் பாஞ்ச பௌதிக தேஹத்தை லயாதிக்ரமத்தால் ஸம்ஹரித்தும், மறுபடி ஸ்ருஷ்டியாதி க்ரமத்தால் ஸ்ருஷ்டிப்பதுமாகிய பூத சுத்தியைச் செய்து, அதில் அவர் சிந்நங்களான சங்க சக்ராதிகளை ஹோமாதிகளைச் செய்து சுத்தீகரித்து ஆசார்யர் அந்தந்த மந்த்ரங்களைச் சொல்லித் தரிப்பிக்கச் செய்ய வேணும்.

பிறகு நமக்கு, பாபத்தை போக்குவதும் ஆயுஸ்ஸை வளர்ப்பதுமான ஸ்வேதமிருத்திகை (திருமண்) மந்த்ரங்களைச் சொல்லிக் குழைத்து பகவத் பாதாக்ருதியாய் நெற்றி முதல் 12 இடங்களில் ஊர்த்வமுகமாய், ஸச்சித்ரமாய் தரித்தவைக்க

வேணும், நம் மதத்துக்குத் தாயாரும் பரதைவதமாகையால் அவருடைய சின்னமான ஸ்ரீசூர்ணத்தை நடு இடங்களில் அவருடைய மந்த்ரங்களைச் சொல்லி ஆசார்யர் தரிக்கவைக்க வேணும்.

நாம் அவர்களுக்கு தாஸனனாதால் ஆசார்யர் சிஷ்யனுக்கு ராமதாஸன், க்ருஷ்ணதாஸன் என்று பேரும் வைக்க வேணும்.

பிறகு தன்னுடைய குரு பரம்பரையைச் சிஷ்யனுக்குச் சொல்லிவித்துத் தாங்களும் அனுசந்தித்துக் கொண்டு மூன்று மந்த்ரங்களையும் உபதேசிக்க வேணும். ஸ்ரீமத் ராமாயணம், பாதுகாஸஹஸ்ரம் இவைகளையும் உபதேசித்து ஸங்க்ரஹமாக பகவதாராதன க்ரமத்தையும் உபதேசிக்க வேணும்.

ஆகையால் நாமும் நல்ல குருக்களை அடைந்து பஞ்ச ஸம்ஸ்காராதிகளைச் செய்து கொண்டு உஜ்ஜீவிக்க வேணும். மந்த்ர மந்த்ரார்த்தங்களை க்ரஹித்து உபதேசித்துக் கொண்டு, 'நாம் யார், நமக்கு யஜமானன் யார், அவரை அடைவதால் வரும் பயன், அடைவதற்கு விரோதி, அதைப் போக்கும் வழி இவைகளாகிற அர்த்த பஞ்சகத்தை அறியவேண்டும். (1) நாம் (2) பெருமாளுடைய (3) கோபத்தைப் (4) போக்கிப் (5) பெருமாளிடம் போய், பெருமாளுக்குக் கார்யம் செய்ய வேணுமென்று இவ்வாறாக அர்த்த பஞ்சகத்தை நம்மாண்டவன் (ஸ்ரீமத் தேரழுந்தூர் ஆண்டவன்) எப்பொழுதும் இந்த புத்தி நமக்கு வரவேண்டியதற்காக ஸாதித்தாகும். இதை அறிந்தால்தான் வைஷ்ணவனாவோம்.

இவைகளை உபதேசிக்கிற ஆசார்யாளிடத்திலும் அவர்களுடைய பரம்பரையிலும் விசேஷப் ப்ரதிபத்தி வேணும். அதற்காக நம் ஸம்ப்ரதாய ஆசார்ய பரம்பரையைப் பற்றிக் கொஞ்சம் எழுதப்படுகிறது.

இந்த ஸம்ப்ரதாயத்துக்கு ஆதியில் ப்ரதமாசார்யன் பெருமாள். அவர் வேதம் முதலியதைக் காப்பாற்றி வ்யாஸாதி ரூபிகளாய் அவதரித்து வேதங்களைப் பிரித்து அதின் உபாய பாகத்திலுள்ள அர்த்தங்களைச் சுருக்கி ப்ரஹ்ம ஸூத்ரமென்றும் தர்ம ஸூத்ர மென்றும் செய்தருளினார்; ஸ்ரீ பாஞ்சராத்ர ஶாஸ்த்ரத்தை நேராகவே உபதேசித்தார்.

பிறகு 2வது ஆசார்யர் தாயார். அவர் பெருமாளிடமிருந்து பாஞ்சராத்ர ஶாஸ்த்ரத்தைக் கேட்டு லக்ஷ்மீ தந்த்ரம் முதலியவைகளால் வெளியிட்டருளினாள்.

3வது விஷ்வக்ஸேனர். இவருடைய அனுமதியின்றி ஒரு சாஸ்த்ரம் ப்ரவர்த்திக்காதாதலாலும் நம்மாழ்வாருக்கு ஸமாச்ரயணம் - மந்த்ரோபதேசம் இவைகளைச் செய்ததாலும் நம் மூன்றாவது ஆசார்யர்.

# ஆச்ரம வரலாறு
## ஸ்ரீ ஆக்கூர் ஆண்டவன் எனும்
## ஸ்ரீநிவாஸமஹாதேஶிகன்
## எங்களாண்டவன்

ஸ்ரீகாஞ்சிக்கு அருகில் ஸ்ரீவைஷ்ணவ அக்ரஹாரமான ஆக்கூரில் ஸ்ரீ ஸ்ரீநிவாஸாசார்யருக்கு 1880 விக்ரம வர்ஷம் புரட்டாசி உத்ரட்டாதி நக்ஷத்ரத்தில் ரங்கனாதாச்சார் என்னும் திருக்குமாரர் அவதரித்தார். இவரே நம்மாண்டவனுக்குப் பின் அடுத்த ஆண்டவன். நம்மாண்டவனுக்கு ஆவணி பூரட்டாதி திருநக்ஷத்ரம். இந்த ஆக்கூர் ஆண்டவனுக்கு புரட்டாசி உத்ரட்டாதி திருநக்ஷத்ரம் என்கிற பொருத்தமும் ஸ்வாரஸ்யம்.

ஸ்ரீ பெரியாண்டவன் ஸ்ரீமத் ஸ்ரீநிவாஸ மஹா தேசிகனுடைய பரிபூர்ண கடாக்ஷ ம் இந்த ஸ்வாமிக்கு ஜாயமான தசையிலேயே ஏற்பட்டது. இந்த ஸ்வாமி திருத்தாயாருக்கு வெகுகாலம் ஸந்தானமொன்று மில்லாமலிருந்தது, ஸ்ரீரங்கத்தில் அந்த அம்மாளின் ஆத்மரக்ஷாபரம் ஸ்ரீமத் பெரியாண்டவனால் ஸ்ரீரங்கநாதன் திருவடி வாரத்தில் ஸமர்ப்பிக்கப்பட்ட போது,புஷ்பமாரி முதலான சுப சகுனம் ஏற்பட்டதிலிருந்து "புத்ரஸந்தானம் ஏற்படும் ;குழந்தை பரம வைராக்யநிதியாயிருப்பன் ;ஸ்ரீரங்கநாதன் திருநாமமே சாத்த வேணு"மென்று ஸ்ரீமத் பெரியாண்டவன் நியமனமான ப்ரகாரமே புத்ர ஸந்தானம் ஏற்பட்டு,ரெங்காசாரியார் என்னும் திருநாமத்துடன் பூர்வாச்ரமத்தில் ஸ்ரீமத் பெரியாண்டவனுடைய கடாக்ஷத்துக்கு பூர்ண பாத்திரர் ஆனார்.

யதாகாலம் உபநயனாதி ஸம்ஸ்காரங்களைப் பெற்று ஸ்ரீ ஆக்கூர் ரங்கநாதாசார்யர் ஜ்ஞானானுஷ்டானங்களினாலும் தேஜஸ்ஸினாலும் குணசம்பத்தினாலும் நாள்தோறும் அபிவ்ருத்தராய் இருந்தார். தர்க்க வ்யாகரண மீமாம்ஸாஶாஸ்த்ரங்களை கண்ட்ரம்பாக்கம் ஸ்ரீ ஸ்ரீநிவாசாசார்யர் என்பவரிடம் அதிகரித்து மஹாவித்வானாக இருந்தார். இவர் நம் ஆண்டவன் ஸ்ரீவேதாந்தராமானுஜ மஹாதேசிகன் திருவடிவாரத்தில் சமாச்ரயணம், க்ரந்த சதுஷ்டயம் காலக்ஷேபம் செய்து, சரணாகதியும் செய்து கொண்டு சோளங்கிபுரத்தில் பாகவத -பாரத- ராமாயணப் ப்ரவசனங்கள் செய்து கொண்டிருந்தார்.

பின்னர் தம் ஆசார்யரான ஸ்ரீமத் தேரழுந்தூர் ஆண்டவன் காஞ்சீபுரம் எழுந்தருளியிருக்கையில் ஸ்ரீ ஆக்கூர் ரங்கநாதாசார்யர் ஸர்வத்தையும் விட்டுவிட்டு, பெருமாள் கோவிலில் தேரழுந்தூர் ஆண்டவனுடன் கூடவேயிருந்தார். அவருக்கு மறுபடி எல்லா க்ரந்தங்களையும் சிந்தனை செய்து வைத்து எல்லாவற்றையும் தமிழிலேயே சொல்லும்படி சொல்லிக் கொடுத்தும், விஶேஷமாய் திருவாய்மொழி, பகவத் விஷயம் இவைகளையும் ஸ்ரீநம்மாண்டவன் சொல்லிக் கொடுத்தாயிற்று. ஸ்ரீநம்மாண்டவனிடம் ஸ்ரீ ஆக்கூர் ரங்கனாதாசார்யர் ஒருமுறை யல்ல, ஐந்து தடவை க்ரந்த சதுஷ்டயமும் காலக்ஷேபம் செய்தார். எப்பேற்பட்ட கொடுப்பினை. ஸ்ரீ நம்மாண்டவன் ப்ரபத்தி ப்ரயோகமும் ப்ரேஷ மந்த்ரமும் இவருக்கு உபதேசம் செய்தாயிற்று.

ஸ்ரீமத் நம்மாண்டவனுக்கு திடீரென்று திருமேனிக்கு நோவு ஏற்பட்டது. இந்த ரங்காசார்யரை ஆசார்யராய் நிர்பந்தித்தும் என்ன நியமித்தும் பயத்தால் அவர் சம்மதிக்கவில்லை; மற்ற ஒருவருக்கும் ஆசார்யகத்துக்கு வர சௌகர்யமில்லை. ஒருவரையும் ஏற்படுத்தாமலேயே 23 சாதுர்மாஸ்யங்களுக்குப் பின் ப்ரஜோத்பத்தி ஆடி க்ருஷ்ண பஞ்சமீயில் ஸ்ரீநம்மாண்டவன் 1932ல் தம் 60 திருநக்ஷத்ரத்தில் காஞ்சீபுரம் பாதுகாச்ரமத்தில் பரமபதித்தாகிவிட்டது. அங்கேயே ப்ருந்தாவனம். அந்த கைங்கர்யம் பதினாயிரம் ரூபாய்க்குமேல் செலவு செய்து நடந்தது.

ஏற்கனவேயே இந்த ஸம்ப்ரதாயத்தை காடந்தேத்தி ஆண்டவனைக் கொண்டு புநருத்தாரணம் செய்த ஸோசலை வம்சத்தார் சின்ன யஜமானர் திருமலை ஸ்ரீநிவாஸாசார்யர், திவான் பகதூர் வி கே ராமானுஜாசார்யர், காடந்திருத்தி வேதாந்தாசார்யர், ஸ்ரீரங்கம் அய்யனாசார்யர், ஸ்வச்சந்தம் வீரராகவாசார்யர் இன்னும் பல சிஷ்யர்களும் நம்மாண்டவன் கைங்கர்யம் முடிந்த மறுநாளே, ஆண்டவன் நியமனத்தைத் தட்டிவிட்டோமே என்ன ஆகுமோ என்று தவித்துக் கொண்டிருக்கும் இந்த ஆக்கூர் ஸ்வாமியை ஸ்ரீரங்கத்துக்கு எழுந்தருளப்பண்ணி வந்து, ஏற்கனவே நம்மாண்டனிடம் ஸந்நியாசம் பெற்றுக் கொண்டிருந்த திருக்குடந்தை நாராயணஸ்வாமி என்பவரிடம் ஸந்நியாஸம் பண்ணிவைத்து, இந்த ஸம்ப்ரதாயத்துக்கு ஆசார்யனாக்கி ஒரு வருஷம் தானும் கூடயிருந்து பலர்களுடன் க்ரந்த சதுஷ்டயத்தையும் காலக்ஷேபம் செய்து வந்தார்;

நம்மாண்டவனோடு ஸம்ப்ரதாயமே போய்விட்ட தென்று எல்லோரும் தவித்துக் கொண்டிருக்கவே விளக்கில் ஏற்றிய தீவர்த்திபோல் ஆசாரம், அனுஷ்டானம், ஆண்டவனைப் போல் தினம் ஆறு பாதுகாராதனம் முதலியவைகளைச் செய்து கொண்டு பகவத் பாகவத பக்தராயும் கம்பீர சேவையுள்ளவராயும் எல்லோருக்கும் ஸுலபராயும் ஸரஸ பாஷணத்துடன் கர்வாஹங்கார மில்லாதவராயும் எழுந்தருளியிருக்கவே, எல்லோரும் ஸந்தோஷங் கொண்டு இவரை எங்களாண்டவன் என்று சொல்லிக் கொண்டு ஆச்ரயிக்கத் தொடங்கினர். ஒரு வர்ஷ காலத்துக்கு மேல் ஸ்ரீரங்கம் பெரியாஸ்ரமத்தில் இருந்து சம்ப்ரதாய சம்ரக்ஷணம் செய்து கொண்டிருந்த போது அவரவர்கள் க்ராமத்துக்கு ஏளவேணு மென்று ப்ரார்த்திக்கவே, பாதயாத்ரையாக திவ்ய தேசங்களை மங்களாஶாஸனம் செய்யவும், சிஷ்யர்களை அநுக்ரஹிக்கவும் சோள தேசத்தில் தில்லைஸ்தானம், ராயம்பேட்டை மார்க்கமாகத் திருக்குடந்தைக்கு எழுந்தருளினார்.

அப்பொழுதுதான், ஸ்ரீமத் திருக்குடந்தை ஆண்டவன் தம் பூர்வாச்ரமத்தில், ஆக்கூர் ஆண்டவனிடம் (ஏற்கனவே நம்மாண்டவனென்று சொல்லப்படும் தேரழுந்தூர் ஆண்டவனிடம் ரஹஸ்ய, பகவத் விஷயம் தவிர, மற்ற க்ரந்தங்கள் காலக்ஷேபமாகாததால் அவைகளையெல்லாம்) காலக்ஷேபம் செய்து அமுதன் ஸந்நிதியில் விசேஷ பாகவத ததீயாராதனங்களுடன் சரணாகதியும் செய்து கொண்டார். அங்கு இரண்டு வருஷ காலம் எழுந்தருளியிருந்த சமயம்

நம்மாண்டவனுக்கு சன்னிதியும், அதற்கெதிரில் வேணுகோபாலன் ஸந்நிதியும் கட்டிவைத்து ஆண்டவனையும் பெருமாளையும் ப்ரதிஷ்டை செய்துவைத்து, பட்டணம் ராஜகோபாலாச்சார் எனப்படும் தேரழுந்தூர் ராஜகோபாலாச்சார், ஆண்டவன் திருவடியில் பரம பக்தரும் பரம தார்மிகருமாதலால் பெருமாளுக்கும் ஆண்டவனுக்கும் நித்யாராதனம் திருநக்ஷத்ர தேசாந்தர கட்டளை இவைகளுக்கு வேண்டிய த்ரவ்யங்களை மூலதனத்துடன் ஏற்படுத்திவிட்டு, தேரழுந்தூர், திருநகரி முதலிய திவ்ய க்ஷேத்ரங்களை மங்களாஶாஸனம் செய்து கொண்டு, நாகைப்பட்டணம் ஸமீபமுள்ள பாப்பா கோவிலுக்கு எழுந்தருளியாச்சு. அங்கு பெருமாளுக்கு லக்ஷார்ச்சனை செய்வித்து ரூ 700 பெருமானமுள்ள கவசங்கள் சமர்ப்பித்தாயிற்று. கீழையூர், சாக்கை, எம்பளச்சேரி மற்றும் விளக்குடிக்கு எழுந்தருளியாயிற்று. அங்கு ஸ்ரீநிவாச மஹாதேசிகன் அர்ச்சையாய் எழுந்தருளியுள்ளார். அங்கு ஸ்ரீராஜகோபாலப் பெருமாளுக்கு கவசம் சமர்ப்பித்தாயிற்று. வடுவூரில் சக்ரவர்த்தித் திருமகனின் சௌந்தர்யத்தில் ஈடுபட்டு மிக வைபவமாக லக்ஷார்ச்சனை, கோயிலாழ்வார் திருமஞ்ஜனம், எல்லாப் பெருமாள் ஆசார்யர்களுக்கும் பீதாம்பரங்கள் சமர்ப்பித்து மகிழ்ந்தாயிற்று. மன்னார் கோவில், வழுத்தூர் வெண்ணாற்றங்கரை முதலிய இடங்களுக்கு எழுந்தருளியாகி ஆங்காங்கு சாதுர்மாஸ்ய ஸங்கல்பம், ஆண்டவன் வர்ஷாராதன கைங்கர்யம் இவைகளை வெகு விமர்சையாக பாராயணாதிகளுடன் செய்வித்தருளியும் செய்து கொண்டிருந்தாயிற்று.

வெண்ணாற்றங்கரையில் ஒருவருஷம் எழுந்தருளி யிருந்து அங்குள்ளவாளுக்கு, க்ரந்த சதுஷ்டய காலக்ஷேபம் செய்வித்தும் நீலமேகன் ஸந்நிதியில் பெருமாள் ஸ்வப்னத்தில் நியமித்தபடிக்கு த்வஜஸ்தம்பம் தாயாருக்கு ஸ்ரீ சடாரி முதலியதும் செய்வித்து கோவிலடி என்னும் அப்பக் குடத்தானிலும் அவருக்கும் தாம்ரத்தினால் த்வஜஸ்தம்பம் செய்தருளி ஸ்ரீரங்கம் எழுந்தருளியாயிற்று. அரியக்குடியில் எழுந்தருளி யிருந்தபோது திருமேனி பாங்கில்லாமல் போகவே சிஷ்யர்கள் பெருமாளுக்கு லக்ஷார்ச்சனை சமர்ப்பித்தனர். இத்தனை இடங்களிலும் தனக்கு உபஹார த்ரவ்யமாய் வந்ததைக் கொண்டு ஏற்கனவே பெருமாள் கோவிலிலும் ஸ்ரீரங்கத்திலும் ப்ரதிஷ்டை செய்யப்பட்ட நம்மாண்டவன் ஸந்நிதிகளில் நித்யாராதன கைங்கர்யங்களுக்காக ஏற்கனவே திருக்குடந்தையிலுள்ள திருக்களாவூர் ரெங்காசார்யார் என்னும் பக்தர், பூமா என்னும் பக்தை இவர்களால் கீழவழுத்தூர் க்ராமத்திலும் அதற்கு ஸமீபமுள்ள க்ராமங்களிலும் வாங்கப்பட்டிருக்கும் பூமியோடு ஸ்ரீரங்கம் பெரியாச்ரமத்துக்கு ஸமீபமுள்ள இடத்திலும் அன்பில் க்ராமத்திலும் பூமிகள் வாங்கி வைத்து விட்டு, உடனே திருவணையாத்ரையாகப் புறப்பட்டு, புதுக்கோட்டை வழியாக ஸேதுவுக்கு எழுந்தருளியாயிற்று. ஸ்ரீமத் ஆக்கூர் ஆண்டவன் ஸதா ராம கல்யாண குணங்களையே நினைந்து மயிர்கூச்சலெடுத்து ஆனந்திப்பவர் ஆதலால் திருப்புல்லாணியில் சக்ரவர்த்தித் திருமகன் தன் குழந்தையான இந்த ஸ்வாமியின் வரவை ஆவலோடு எதிர்நோக்கியிருந்ததுபோல் ராமனாதபுரம்

அரண்மனையிலிருந்து சகல திருவாபரணங்களையும் தருவித்து சாற்றிக்கொண்டு அத்யாஶ்சர்யமாக ஸ்ரீமத் ஆண்டவனுக்கு சேவை சாதித்தார்.

அங்கிருந்து நவதிருப்பதிகளிலும் பெருமாளை மங்களாஶாஸனம் செய்து கொண்டும் மறுபடி ஸ்ரீரங்கத்துக்கு எழுந்தருளி சொல்ப காலம் அங்கிருந்துவிட்டு மறுபடி பெருமாள் கோவிலுக்கு ஸ்ரீநம்மாண்டவன் ப்ருந்தாவனத்தை சேவிக்க பேரவாவுடன் எழுந்தருளியாச்சு. ஸ்ரீமுஷ்ணம், திருவஹீந்த்ரபுரம் மார்கமாக பெருமாள் கோவிலுக்கு எழுந்தருளின சமயம் தேவபெருமாள் குதிரைவாஹனத்தில் முன்னதாகவே எழுந்தருளி ஸ்ரீமதாண்டவனுக்கு சேவை சாதித்த பரிவும் பாங்கும் சொல்லுக்கு நிலமல்ல. நேராக பாதுகாச்ரமம் எழுந்தருளி ஸ்ரீமந் நம்மாண்டவனை தண்டம் ஸமர்ப்பித்த போதுதான் ஆசார்ய பக்தி என்றால் என்ன என்பது லோகத்துக்கு வெளியாயிற்று. வெகு காலம் தாயைப் பிரிந்த கன்று தன் தாயின் ஸமீபம் போக ஸௌகர்யம் ஏற்பட்டவுடன் எவ்வளவு த்வரையுடனும் வேகமாயும் அம்மா அம்மா என்று அலறிக் கொண்டு தாயிடம் சேருமோ, சக்ரவர்த்தித் திருமகன் காட்டுக்கு எழுந்தருள அவரைக் காண காட்டுக்குப் பின் தொடர்ந்து சென்ற பரதாழ்வான் ஸ்வாமியை தூரத்தில் ஸேவித்தவுடன் நெஞ்சுருகி 'ஆர்யா' என்று மாத்திரம் சொல்லச் சக்தியுள்ளவராய் பூமியில் விழுந்தது போல் நம் ஸ்ரீ நிவாஸ மஹாதேசிகனும் "ஹே மஹானுபாவா !" என்று தழதழத்த குரலுடன் அங்கநேத்ர விக்ரியைகளுடன் (புளகாங்கிதராய் கண்ணீர் மல்க) ஸேவித்ததைக் கவனித்தவர்கள் எவ்வளவு

மந்தரானாலும் குரு பக்தியில் ச்ரேஷ்டர்களாய் ஆகாமலிருக்க முடியாது. அந்தத் திருவடி வாரங்களிலேயே கொஞ்ச காலம் எழுந்தருளியிருந்த போது ஸ்ரீ பெருந்தேவித்தாயாரும் தேவபிரானும், தங்களுக்கு இந்த ஸ்வாமியிடம் அளவில்லாத ப்ரீதியிருப்பதை அநேக விதமாய்க் காட்டினார்கள். தெற்கே மதுரையில் (கூடல் நகரில்) ஸ்வாமி எழுந்தருளியிருந்த காலத்திலேயே சுமார் ரூ 3500 பெருமானமுள்ள ஒரு ஸாளக்ராமமாலை ஸ்ரீ தேவபிரான் திருவுள்ளம் பற்றியிருந்தார். இப்போது முன் வருஷம் திருட்டுப் போயிருந்த வைரத் திருமண் காப்புக்குப் பதிலாக ஒரு திருமண் காப்பு (ரூ 2500 பெருமானம்) ஸமர்ப்பிக்கப்பட்டது. நம்மாண்டவன் காலத்திலிருந்து ஸமர்ப்பிக்க வேணுமென்று யோசித்திருந்த ஸ்வர்ணத் திருமஞ்சன வேதியும் இப்போதே பெருமாள் திருவுள்ளம் பற்றினார். இது சுமார் ரூ 3500 பிடித்தது. ஸ்ரீ சடாரியில் சில பழுதுகள் பார்க்கச் சுமார் ரூ 1000 பிடித்தது. மறுபடியும் த்வஜஸ்தம்ப ப்ரதிஷ்டா காலத்தில் திருமஞ்சன வேதிகைக்கு மேல்கட்டு ஒன்று (ரூ 150 பெருமானமுள்ளது) ஸமர்ப்பிக்கப்பட்டது. இந்தப் பெரிய கைங்கர்யங்களல்லாமல் நித்யப்படியாய் தளிகைகள் திருமஞ்சனங்கள் முதலியவை கணக்கிலகப்படா. இந்த மாதிரியான பெரும் கைங்கர்யங்களில் ட்டிவிட்டுத் திருவுள்ளம் பற்றினதிலிருந்து ஸ்ரீ தேவபிரானும் பெருந்தேவித்தாயாரும் இந்த ஸ்வாமியை விசேஷமாகக் கடாக்ஷித்தருளினது விசதமாகிறது.

இங்கிருந்து ஸ்ரீ பெரும்பூதூர் மார்க்கமாய் திருவள்ளூரில் ஸ்ரீ வீரராகவனை மங்களாஶாஸனம் பண்ணி, அங்கே ஒரு மேல்கட்டு சுமார் ரூ 150-ல் ஸமர்ப்பித்து விட்டு திருமலை யாத்ரை எழுந்தருளியாச்சுது. அங்கு வ்யாபகாளான தம் சிஷ்யர்களால் செய்விக்கப்பட்ட விசேஷ குடை - சாதரா முதலிய மர்யாதைகளைப் பெற்றுக் கொண்டாயிற்று.

அங்கே திருவேங்கடமுடையான் தன் திருநாமத்தை இந்த ஸ்வாமிக்குச் சாத்தினது ரொம்பவும் பொருத்தமே ; தான் வேறு, இந்த ஸ்வாமி வேறில்லை என்பவர் போல் கோவில் மர்யாதைகள் ஸகலத்தையும் ஸ்ரீ சடகோபாழ்வானையும் அனுப்பி எதிர்கொண்டு அழைத்து ஒரு சத்ரத்தையும் தான் உடுத்திக்களைந்த பீதக வாடையையும் கொடுத்து தன் ப்ரீதியதிசயத்தை வ்யக்தமாய் வெளியிட்டருளினார். மேலும் தான் எல்லாருக்கும் ஸாதாரண காலங்களில் ஸேவை ஸாதிப்பது போல் இந்த ஸ்வாமிக்கு ஸேவை ஸாதிப்பது போதாதென்று, இந்த ஸ்வாமியினிடமிருந்து ஒரு திருக்கல்யாண மஹோத்ஸவம் கண்டருளினார். மறுநாள் தற்செயலாய் ரதஸப்தமி தினமாக இருந்ததும் பெருமாளுடைய திருவுள்ளத்தின் உகப்பையே வ்யக்தமாக்குகிறது. அன்றைய தினம் அதிகாலையில் சூர்ய ப்ரபையில் ப்ரதிசூர்யன் உதித்ததுபோல், -ரத்ன கவசாலங்க்ருதராகவும் புதிய சூர்ய பதக்கத்துடனும் ஸேவை ஸாதித்த ஆனந்ததுக்கு அளவே கிடையாது. ராத்திரி 10 மணி வரையில் பலவிதமான சாற்றுப் படிகளுடன் இன்னும் 6 வாஹனங்களில் ஸேவை ஸாதித்தார். இதற்கு முந்தியே

கீழ்த்திருப்பதியிலும், திருச்சானூரிலும் பெருமாளும்,தாயாரும் விஶேஷ மர்யாதை அருளி ஸேவை ஸாதித்தார்கள். இப்படி இதற்கு முந்தி எந்த ஸ்வாமிக்கும் நடக்காத மர்யாதைகள் அயத்னமாய் அகஸ்மாத்தாய் நடந்த வைபவத்தைக் - கவனித்தால் இந்த எம்பெருமான்கள் தங்களுக்கு இருந்த ப்ரீதிக்கு இந்த ஸ்வாமிக்கு என்ன செய்தாலும் போதாதென்று சொல்வது போல் தோன்றியது.

அங்கிருந்து மைசூர் பக்கம் எழுந்தருளி ஸோஸலை திருநாராயணபுரம் முதலிய இடங்களிலிருந்து கொண்டு தினம் 100-150 பேருக்குக் குறையாமல் சிஷ்யாளுக்கு ஸமாச்ரயணாதிகளைச் செய்வித்து அங்கு கொஞ்சகாலம் எழுந்தருளியிருந்தாயிற்று. இந்த விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்துக்குப் புத்துயிர் கொடுத்து,வளர்த்த மேலக் கோட்டை என்கிற திருநாராயணபுரத்தில் செல்வப் பெருமாளும் விசேஷ மர்யாதைகள் பண்ணி ப்ரும்மோத்ஸவம் பூறாவும் தன்னிடத்திலேயே வைத்துக் கொண்டு அனுக்ரஹித்தருளினார்.

திரும்பி ஸ்ரீவில்லிபுத்தூர் மதுரை,அரியக்குடி,காரைக்குடி முதலிய இடங்களுக்கு ஏளி அங்குள்ளவாளுக்கு ஸமாஸ்ரயண சரணாகதிகளை செய்துவிட்டு மறுபடி ஸ்ரீரங்கம் எழுந்தருளி சின்னாஸ்ரமத்தில் விசேஷ காலக்ஷேபாதிகளை ஸாதித்துக் கொண்டிருந்தார். கோவிலிலேயே (ஸ்ரீரங்கம்) நித்யவாஸம் பண்ணும்படியான மஹாபாக்யம் பெற்ற இந்த ஸ்வாமிக்குப் பெரிய பெருமாளுடைய கடாக்ஷம் இருக்கும்படி என்னென்று சொல்வது. இப்படியெல்லாம் ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்ததுக்கு முக்கிய ஸ்தலங்களான கோயில்,திருமலை,பெருமாள்

கோயில், திருநாராயணபுரம் என்கிற க்ஷேத்ரத்து எம்பெருமான்களும் மற்றுமுள்ள இதர திவ்யதேசத்து எம்பெருமான்களும் எங்களாண்டவனை ரொம்பவும் கௌரவித்து அங்கீகரித்த விதத்திலிருந்து பெருமாளுடைய பூர்ண கடாக்ஷத்திற்கு இந்த ஸ்வாமி விஷயம் என்கிற ஸங்கதி நன்றாய் தெரிகிறது. உலகத்தில் ஜனங்கள் நான் ரொம்பவும் பொறுத்துப் பார்த்தேன் தாங்கவில்லை என்று சொல்லுகிறார்களே. பொறுப்பது என்பதற்கு அளவு என்ன சொல்லு பார்ப்போம். **किंदुस्सहं हि साधूनां** என்று நம் ஸ்வாமி சாதித்ததைக் கவனித்தால் **क्षिति क्षमावान्** என்று பூப்பிராட்டியைப் போல் பொறுமையுடனும், ஜகத்தின் ஹிதத்தையே கருதி ஸம்ஸாரத்தைத் துறந்தும், **अज्ञातनिग्रह** ராய் கோபம் என்பது என்ன வென்றே தெரியாதவரான இந்த ஸ்வாமியின் கல்யாண குணங்கள் பெரிய பிராட்டியாரின் பூர்ணானுக்ரஹத்தைப் பெற்றவர் இந்த ஸ்வாமி என்றும் தெரிவிக்கிறது.

ஸ்ரீகாஞ்சீபுரத்தில் எழுந்தருளியிருந்தக்கால் அங்கு நம்மாண்டவன் காலத்தில் கட்டப்பட்டிருக்கின்ற பாதுகாச்ரமத்தில் விசேஷ திருமண்டபாதி கைங்கர்யங்களைச் செய்வித்து, திருவாராதனத்துக்கு வேண்டிய த்ரவ்யங்களுக்காக மூலதனமாய் பூமிகளை ஏற்படுத்தியாயிற்று.

ஸ்ரீமத் ஆக்கூர் ஆண்டவன் அத்புதமாக ப்ரவசநம் செய்தாகும். அதே போல் அத்புதமான கவியும் ஆவார். தம் ஆசார்யரான ஸ்ரீ நம்மாண்டவனின் ப்ரபாவத்தை 100 ஶ்லோகங்களில் அத்புதமாக சாதித்துள்ளார். ஸ்ரீ நம்மாண்டவன் சாதித்துவந்த

பாதுகா ஸஹஸ்ர வ்யாக்யாநம் பூர்த்தியடையாமல் இருந்த சமயம் ஸ்ரீமந் நம்மாண்டவனின் நியமனப்படி 861 ஆவது ஶ்லோகம் முதல் தம்முடைய வ்யாக்யானத்தால் பூர்த்தி செய்து ஸ்ரீமந் நம்மாண்டவனின் ஜீவித தசையிலேயே காட்ட ஸ்ரீநம்மாண்டவனும் திருவுள்ளம் குளிர்ந்தாயிற்று. பின்னாளில் சம்பூர்ணமாக அச்சிட்டும் வெளிக் கொணர்ந்து அனுக்ரஹித்தாயிற்று. சேவையின் துடக்கம் சாற்றுமுறை க்ரமம் என்ற புஸ்தகத்தையும் சாதித்து அச்சிட்டு உபகரித்தாயிற்று.

பொறுமை, பகவத் அனுபவத்தில் திளைத்து தன்னை மறத்தல் எல்லாம் இந்த ஆசார்யரிடம்தான் த்ருஷ்டாந்தம். ஸ்ரீமத் ஆக்கூர் ஆண்டவனுக்குத் திருமார்பில் ஒரு பெரிய கட்டி உண்டு. அது மிகவும் வலியெடுத்தபோது அறுவை சிகித்ஸை செய்யவேண்டும் என்றனர் வைத்யர்கள். சிகித்ஸையின்போது மயக்க மருந்து தரவேண்டும் என்றனர். மயக்க மருந்துவேண்டாம் என்று சொல்லிவிட்டு அறுவை சிகித்ஸையின் போது ஸ்ரீமத் ராமாயண ஶ்லோகங்களை அனுசந்தித்துக் கொண்டு ராமகுணங்களில் ஈடுபட்டு மார்பின் வலியையே மறந்துவிட்டாயிற்று. மருந்தில்லாமலேயே அறுவைச் மயக்க சிகித்ஸையும் பூர்த்தியாயிற்று.

காரைக்குடி ஆண்டவன் திருவடி ஸ்ரீமான் ரகுநாதாசார்யாரைக் கொண்டு அப் ப்ரதேசத்தில் இருந்த திருவாராதனம் இல்லாமல் இருந்த ஸ்ரீ வரதராஜப் பெருமாள் அர்ச்சாமூர்த்தியை ஸ்ரீரங்கம் பெரியாச்ரமத்திற்கு எழுந்தருளப்பண்ணி நித்யாராதனம் கண்டருள ஏற்பாடு செய்தாயிற்று. அங்கேயே மன்னார்கோவில்

ஸ்ரீமான் ரங்காசார்யாரைக் கொண்டு ஸ்ரீமந் நம்மாண்டவனை ப்ரதிஷ்டை செய்து நித்யாராதனம் கண்டருளிம்படி செய்து வைத்தாயிற்று.

எங்களாண்டவன் என்று எல்லாராலும் போற்றப்பட்டு தமிழ்நாடு, தக்ஷிண ஆந்த்ரம், தக்ஷிண கர்நாடகதேசங்கள் பூராவும் பாதசஞ்சாரம் செய்தருளி சம்ப்ரதாய சம்ரக்ஷணம் செய்தருளிக் கொண்டு பிறகு கடைசியாக ஸ்ரீரங்கத்திலேயே எழுந்தருளி சின்னாஸ்ரமத்தில் விசேஷமாக ஸமாச்ரயணம் பரன்யாசம் காலக்ஷேபாதிகளை ஸாதித்துக் கொண்டிருந்தார்.

பதினைந்து சாதுர்மாஸ்யங்கள் ஸ்ரீரங்கம் பெரியாச்ரமம் ஸ்ரீமத் ஆண்டவன் ஸம்ப்ரதாயத்தின் உயர்ந்த ஆசார்யராய் நிர்வாஹம் செய்தபடி. தம் 67 திருநக்ஷத்ரத்தில் திடீரென்று திருமேனி பாங்கில்லாமல் போகவே கூடயிருந்த சதுச்சாஸ்த்ர வித்வானும் பஞ்சகால பராயணரும் சாந்தருமான தென்பரை ஸ்வாமிக்கு ஸந்நியாஸம் ஸாதித்தருளி, அவருக்கு ரங்கனாத மஹாதேபரிகன் என்று திருநாமம் சாத்தி ஸ்ரீமத் ஆக்கூர் ஆண்டவன் (அ)வ்யய வர்ஷம் 1947 பங்குனி க்ருஷ்ண த்வாதசியில் பரமபதித்தாயிற்று. விசேஷ அன்னதானமும் வஸ்த்ரதானமும் நடந்தது. ஸ்ரீமத் தென்பரை ஆண்டவன் ஸ்ரீரங்கனாத மஹாதேசிகன் விரக்தராயும் சாந்தராயும் ஏழு பாதுகைகளையையும் ஆராதித்துத் கொண்டு ஸ்ரீரங்கம் ஆச்ரமத்தில் எழுந்தருளியிருந்தார்.

## எங்களாண்டவன்(ஆக்கூர் ஆண்டவன்) விஜய யாத்ரைகள்.

நவம்பர் 1936

ஸ்ரீரங்கம் பெரியாச்ரமம் விட்டுப் புறப்பாடு.

விளக்குடி - கோபாலாச்சாரியார் திருமாளிகை.

புது அக்ரஹாரம் - சருக்கை கிருஷ்ணமாச்சாரியார் திருமாளிகை, தென்னூர் - வரதாச்சாரியார் திருமாளிகை. மாத்தூர் - ஒரு சத்திரம், நல்லூர் -ஒரு சத்திரம்,

அம்மாசத்திரம் -ஒரு சத்திரம்,

வாகப்பட்டி -ராஜமய்யங்கார் திருமாளிகை. (காட்டுப்பாதை) புதுக்கோட்டை திவான் கிருஷ்ணமாச்சாரியார் திருமாளிகை, சந்தைப் பேட்டை -புதுக்கோட்டையில் திவான் ஸ்வாமி ஸத்காரத்தில் 3 மாதங்கள் வாஸம். பின் அரியக்குடி புறப்பாடு.

### தாது வருஷம் மாசி மாதம் (பிப்ரவரி 1937)

புதுக்கோட்டை திவான் மாளிகையிலிருந்து புறப்பாடு.

கம்மன் செட்டி சத்திரம் - சத்திரம், புலிவலம் - சத்திரம், திருமய்யம்தேசிகன் சன்னிதி, நேமத்தான்பட்டி - சத்திரம், கோட்டையூர் - ராகவாச்சாரியார் திருமாளிகை (உபந்யாஸம் ஸாதித்தருளியது) காரைக்குடி - ரெகுநாதாச்சாரியார் திருமாளிகை, செக்காலையிலிருந்து விருதுகளுடன் காரைக்குடி எழுந்தருளுதல், நாகநாதபுரம் கண்ணன் மங்களாஶாஸனம், அரியக்குடி துவாதசி மடம். அரியக்குடியில் சுமார் 7 மாதங்கள்

எழுந்தருளியாயிற்று. திருமேனியில் நோவு சாத்திக்கொண்டு திருமய்யம் டாக்டர் சுப்ரமணிய ஆய்யர் ஆபரேஷன் செய்த முறையில் குணமாயிற்று. பிறகு இராமநாதபுரம் புறப்பாடு.

**அக்டோபர் 1937**

ஆராவயல்-ஸ்ரீநிவாஸராகவ அய்யங்கார் திருமாளிகை, தேவக்கோட்டை புது சிலம்பணி அக்ரஹாரம், செய்யாநந்தல் - பட்டாபிராம அய்யங்கார் திருமாளிகை, அரசூர் - முன்சீப் அண்ணாத்துரை அய்யங்கார் திருமாளிகை, மண்பாதை திருவாடானை திருவத்தியூர் (குளத்தூர் வழி)--ஒரு தனியார் வீடு, (காட்டு வழி) உப்பூர் சத்திரம் - அழகய்யங்கார் ஸத்காரம், திருப்பாலக்குடி, புதுச்சாவடி, தேவிபட்டணம் (நவபாஷாணம்) - சத்திரம் (சமுத்ர ஸ்னானம்),

ராமநாதபுரம் முஹூர்ணித்தெரு, கோபு சீனிவாசாசார்யர் திருமாளிகை, தர்ப்பசயனம் ஸ்னான கட்டம் - சேஷகிரிராயர் சத்திரம், சேது ஸ்னானம் விஷு புண்ய காலம். தர்ப்பசயனம் முகுந்த ராயர் சத்திரம், புதுக்கோட்டை திவான் கிருஷ்ணமாச்சாரியார், இராமநாதபுரம் திவான் கோபாலஸாமி அய்யங்கார் ஸ்ரீ சீனிவாச அய்யங்கார் இவர்களது ஆதரவாலும் பக்தி விசுவாசத்தாலும் கோவில் மரியாதைகளோடு, ஸ்ரீதேசிகன் சன்னிதியில் எழுந்தருளியிருந்து திருப்புல்லாணி எம்பெருமானை மங்களாஶாஸனம் செய்தருளினார். உத்தரகோசமங்கை (கரடுமுரடான பாதை) - ஒரு சத்திரம், சிக்கல் (வயல்வழி)- ஒரு சத்திரம், கொத்தங்குளம் (காட்டுவழி) சுந்தரேசப் பெருமாள் சன்னிதி --- மிக அருகில் மாமுனிகள்

அவதார ஸ்தலம், செழுவனூர்- ஒரு பக்தர் வீடு, சாயல்குடி- ஒரு சத்திரம், தங்கமாபுரம்- பஜனை மடம், வைப்பார் அரியநாயகம் பிள்ளை சத்திரம், (நதியை மிகவும் கஷ்டப்பட்டு தாண்டப்பட்டது. காட்டாறு. குறுக்கு வழி) வேடவநத்தம்- லோகல் பண்டு சத்திரம்.

## நவம்பர் 1937

ஒட்டப்பிடாரம்- வைகுண்டப்பெருமாள் சன்னிதி (தீபாவளி), மேலதட்டப்பாறை -பெருமாள் நாயக்கர்
பஜனை மடம், கீழ தட்டப்பாறை - கிருஷ்ணன் சன்னிதி, வாகைக்குளம் லோகல் பண்டு சத்திரம் ஸ்ரீவைகுண்டம் - தாத்தாச்சாரியார் வக்கீல் திருமாளிகை. ஸ்ரீ சோரநாதன் ஸ்ரீ சோரநாயகி மங்களாஶாஸனம் திருப்புளியங்குடி- ஸன்னிதி (புஷ்கரிணி நீராட்டம்) நத்தம் - விஜயாசனப் பெருமாள் மங்களாஶாஸனம் பெருங்குளம் -மாயக்கூத்தன் ஸன்னிதி மங்களாஶாஸனம் இரட்டைத் திருப்பதி தென்திருப்பேரை - எம்பெருமான்கள் ஸேவை மகரநெடுங்குழைக்காதர் மங்களாஶாஸனம் ஆழ்வார் திருநகரி- தேசிகன் சன்னிதி . ஸ்ரீஆதிநாதன் குருகை நாச்சியார் ஆதிநாயகி பொலிந்து நின்ற பிரான் மங்களாஶாஸனம் திருக்கோளூர் - வைத்தமாநிதி மதுரகவிகள் மங்களாஶாஸனம் ஆழ்வார் திருநகரி- ஸன்னதியில் உபன்யாஸங்கள் கருங்குளம் - இரண்டு பக்தர்கள் அக்ரஹாரம். மூலைக்கரைப்பட்டி - ரெட்டியார் சத்திரம் வானமாமலை - ராமானுஜகூடம் வானமாமலை ஜீயர் ஸ்வாமி எங்களாண்டவன் எழுந்தருளியிருந்த 5 நாட்களுக்கும் ஆராதித்து, பரத்வாஜாச்ரம உபசாரங்கள் செய்வித்து

ஸ்ரீவரமங்கையையும், தெய்வநாயகனையும் மங்களாஶாஸனம், செய்விக்கப் பண்ணி மடத்தில் பெருமாளுக்குள்ள நகைகளையெல்லாம் காட்டித்தந்து, வந்தவர்களுக்கு எண்ணெய் கொடுத்துத் தேய்த்துக் கொள்ளச் சொல்லி, வண்டிக்காரர்களுக்கும், மாடுகளுக்கும் கூட தீனிகள் கொடுத்து ராஜோபசாரம் செய்து ஆராதித்தார்.

திருக்குறுங்குடி- அஹோபில மடம் நம்பிகள் மங்களாஶாஸனம்- கலியன் பிருந்தாவனம் உடையவர் வட்டப்பாறை ஸேவை -- தென்சிந்து (நம்பி நதி)

மலைமேல் நம்பி ஸன்னிதி (ஆகாச கங்கை போன்ற அருவி நீராட்டம்) திருக்குறுங்குடி.

**டிசம்பர் 1937**

பத்மநேரி - உக்குமந்தராயர் சத்திரம், காருக்குருச்சி - ஸ்ரீகண்ணன் சன்னிதி அம்பாசமுத்ரம் அ.ஓ.சீனிவாசாச்சாரியார் திருமாளிகை மன்னார்கோவில் - குலசேகராழ்வார் பிருந்தாவனம் (கோவில் உள்ளே) (மூலவர் --வலது திருக்கை அபயப்ரதான முத்ரையோடு சீனிவாசன்) அம்பாசமுத்ரம், வீரவநல்லூர் - சுந்தரராஜப் பெருமாள் சன்னிதி, பத்தமடை ஸ்ரீனிவாசன் சன்னிதி -கோபாலசமுத்ரம் அம்பி அய்யங்கார் திருமாளிகை திருநெல்வேலி -வீரராகவபுரம் மண்டபம் கீழநத்தம்-ஸ்ரீவேணுகோபாலன் ஸன்னிதி (நம்பி அய்யங்கார் திருமாளிகை --10 நாட்கள் தங்கியாயிற்று) திருநெல்வேலி - வண்ணாரப்பேட்டை (Rtd.) மருத்துவ அதிகாரி ஸ்ரீநிவாஸராகவ அய்யங்கார் திருமாளிகை இராமய்யன்பட்டி - ஒரு சாவடி

மானூர் - கிராம முன்சீப் கோர்ட்டு அழகியபாண்டியபுரம் - லோகல் பண்டு சத்திரம் பனவடை - லோகல் பண்டு சத்திரம் சங்கரநயினார் கோவில் -செட்டியார் சத்திரம். (சப்- மாஜிஸ்ட்ரேட் நம்பி அய்யங்கார் மிகுந்த உபசாரங்கள். தென்கலை சம்ப்ரதாயஸ்தர்)

**ஜனவரி 1938**

கரிவலம்வந்த நல்லூர் - குன்னக்குடி மேல்மடம் சோளபுரம்- லோகல் பண்டு சத்திரம் இராஜ பாளையம் சம்பந்தபுர அக்ரஹாரம்.

ஸ்ரீவில்லிபுத்தூர் தேசிகாசாரியர் ஆராதித்தார் ஸ்ரீவில்லிபுத்தூர் - வாழைக்குளத் தெரு.- எல்லா சிஷ்யர்கள் (நாச்சியார்,பெருமாள், தேசிகன் மங்களாஶாஸனம்) மலைமேல் சீனிவாசன். ஸ்ரீவில்லிபுத்தூர் - மல்லி திருவாழி அய்யங்கார் திருமாளிகை திருத்தண்கால் - அப்பன் சன்னிதி குருமூர்த்திநாயக்கன் பட்டி - போர்டு பள்ளி பாவாலி - போர்டு பள்ளி வில்லூர் - கோபாலன் சன்னிதி வண்டி அச்சு முறிந்து இரவுதான் சரியானது. ஸ்ரீமதாண்டவன் உள்பட கைங்கர்யபரர்கள் பட்டினி. பட்டணம் மாமா எம்பளச்சேரி ராகவாச்சார் தேஊர் கிருஷ்ணமாச்சார் முதலானோர் கூட இருந்தனர். திருமங்கலம் - சுந்தரதாஸ் வீடு (குஜராத் அந்தணர்) திருப்பரங்குன்றம் - குருக்கள் பங்களா மதுரை வெங்கடசாமி நாயுடு அக்ரஹாரம் லக்ஷ்மீ - வெங்கடேச விலாசத்தில் 2 மாதம் தங்கல்.

அடுத்த மாதம் பேச்சியம்மன் படித்துறை,

இராமேச்வர தேவஸ்தான பாடசாலை மறவன் மண்டபம் அழகர் ஸன்னிதி - உடையவர் ஸன்னிதி, கருட சேவை கஜேந்த்ர மோக்ஷம் நூபுர கங்கை - சிலம்பாறு நீராட்டம்.

**பிப்ரவரி 1938**

அழகர் சன்னிதி பொய்கைக் கரைப்பட்டி- தெப்பம் ஆனைமலை திருமோகூர் ரங்கநாதன் சன்னிதி மதுரை கூடலழகர் ஸேவை -ராயர் தோட்டம் 2 மாதங்கள் தங்கல் அண்ணாத்துரை அய்யங்கார் பங்களா, அழகர் எதிர் சேவை, குதிரை வாகனம், வைகை நடு மண்டபம், சேஷ வாகனம், கருட வாகனம் சேவை மதுரை - அண்ணாத்துரை அய்யங்கார் பங்களா ராமய்யங்கார் மண்டபம் - புஷ்பப் பல்லாக்கு மதுரை திருவாதவூர் - செட்டியார் பாடசாலை கொட்டகுடி - செட்டியார் சத்திரம் கோட்டை நத்தம்பட்டி -ஒரு சத்திரம் உறங்காம்பட்டி - ஒரு செட்டியார் சத்திரம் ஏரியூர்-மண்டபம் --

காரைக்குடி துரைசாமி அய்யங்கார் அவர் சஹோதரர்கள் உபசரணை திருக்கோஷ்டியூர் - தேசிகன் சன்னிதி, கருட சேவை ஸௌம்யநாராயணன் மங்களாஶாஸனம், கொங்கரத்தி - வண்புகழ் நாரணன் சன்னிதி, மாநகர் - சத்திரம் -- காரைக்குடி ரகுநாதாச்சார் உபசரணை, அரியக்குடி துவாதசி மடம் கோவில் மரியாதை - ஸ்ரீனிவாசன் ஸேவை - ஒரு மாதம் தங்கி மங்களாஶாஸனம் காரைக்குடி - ரகுநாதாச்சார் திருமாளிகை கோட்டையூர் ரெங்காச்சாரியார் திருமாளிகை நேமத்தான்பட்டி - செட்டியார் சத்திரம் திருமெய்யம் -தேசிகன் சன்னிதி செட்டி சத்திரம்- கம்மஞ்செட்டி புதுக்கோட்டை- ஸ்ரீரங்கராஜ

அய்யங்கார் திருமாளிகை ஈச்சநாரி போலீஸ் ஸ்டேஷன்
அம்மாசத்திரம் கோபாலஸாமி அய்யங்கார் திருமாளிகை
கொளத்தூர் -ஸன்னிதி தொண்டைமான் நல்லூர் -சத்திரம்
மாத்தூர் - சத்திரம் தென்னூர்- கோவாபரேடிவ் வரதாச்சாரியார்
புது அக்ரஹாரம் - விளக்குடி கோபாலாச்சாரியார் திருமாளிகை
பெரியாச்ரமம் ஸ்ரீரங்கம்.

## ஸ்ரீரங்கத்திலிருந்து காஞ்சீபுரம் புறப்பாடு - ஏப்ரல் 1939

வாளாடி - அக்ரஹாரம் பூவாளூர் - வரதராஜன் சன்னிதி
புள்ளம்பாடி - கணக்கப்பிள்ளை வீடு கள்ளகம் - பிரயாண
விடுதி கீழப்பழுவூர் - பிரயாண விடுதி அரியலூர் - வக்கீல்
ராமானுஜாச்சாரியார் திருமாளிகை சாவடி - பிரயாண விடுதி
விளாங்குடி பிரயாண விடுதி - பள்ளிக்கூடம்
உடையார்பாளையம் - சீனிவாசன் சன்னிதி காட்டாத்தூர்
உடையார்பாளையம் ஜமீன் பங்களா ஆண்டிமடம் -பஞ்சாயத்து
போர்டு கட்டிடம் ஸ்ரீமுஷ்ணம் - ஸ்வர்ணம் கிருஷ்ணமாச்சார்
திருமாளிகை, வேத பாடசாலை ததீயாராதனம்

## மே 1939

முடிகொண்டான் நல்லூர் - குருசாமி அய்யர் வீடு
சேத்தியாத்தோப்பு -லோகல் பண்டு சத்திரம் புன்னலூர் - சாவடி
வடலூர்--குருக்கள் சத்திரம் குறிஞ்சிப்பாடி -பிரயாண விடுதி
குள்ளன்சாவடி - செட்டியார் சத்திரம் பெரியராமபுரம் சாவடி
திருவஹீந்திரபுரம் கருடநதி படித்துறை ஆம்ரமம்.
மேல்பட்டாம்பாக்கம் பெருமாள் சன்னிதி (நெல்லிக்குப்பம் வழி)

கண்ட்ரக்கோட்டை - பெருமாள் சன்னிதி வெங்கடாத்ரி அகரம் - பொய்கைப்பாக்கம் வெங்கடாச்சார் திருமாளிகை

விக்ரவாண்டி சென்னூர் -வரதராஜன் கோவில் அக்ரஹாரம் சென்னூர் -அக்ரஹாரம் வெள்ளிமேடு - தேவனாதாச்சாரியார் திருமாளிகை தையார் பெருமாள் சன்னிதி வந்தவாசி போலீஸ் --பாஷ்யம் கோபாலாச்சார் திருமாளிகை புரிசை ராமானுஜாச்சார் திருமாளிகை மேல்மா - கல்யாணமய்யங்கார் திருமாளிகை மாங்கால் மண்டபம் - ஆக்கூர் மஹாஜனங்கள் வரவேற்பு காஞ்சி -தூப்புல் தேசிகன் சன்னிதி, ஜடாப்ரஹ்மசாரி ததீயாராதனை, பாதுகாச்ரமம் ஸ்ரீரங்கராஜ வீதி காஞ்சீ, 5 மாதங்கள் தங்கியது காஞ்சீபுரத்திலிருந்து மேல்கோட்டை, திருநாராயணபுரம், ஸோஸலை புறப்பாடு

## அக்டோபர் -1939

மாகரல் -ஸன்னிதி, உத்திரமேரூர் - கிருஷ்ணமாச்சாரியார் திருமாளிகை (ராமாயண -- பாகவத --சில்லரை ரஹஸ்ய காலக்ஷேபங்கள்)

## ஜனவரி 1940

மாகரல் ரெவின்யூ அதிகாரி கிருஹம், காஞ்சீபுரம் பாதுகாச்ரமம் திருப்புட்குழி, கூரம் மங்களாஶாஸனம்.

நீரளூர் ஒரு வீடு, ஸ்ரீபெரும்பூதூர் உடையவர் மங்களாஶாஸனம். பாக்குப்பேட்டை.

## பிப்ரவரி 1940

திருவள்ளூர் - வசந்தோத்ஸவ பங்களா. பெருமாள் தாயார் மங்களாஶாஸனம். ரூ.150/- பெறுமானமுள்ள பட்டு அஸ்மானகிரி (மேல்கட்டு) பெருமாளுக்கு சமர்ப்பிக்கப் பட்டது. ஒதப்பை கிராமம் - சாவடி, போந்தவாக்கம் பெருமாள்கோவில், நாகலாபுரம் - பெருமாள்கோவில், கொப்பேடு - ஒரு வைஷ்ணவர் திருமாளிகை, நாராயணவனம் - பெருமாள் ஸன்னிதி, புத்தூர் - பஜனை மடம், வடமலைப்பேட்டை - பஜனை மடம்.

### .. திருச்சானூர்(11.2.1940)

தேவஸ்தான சத்திரம் தாயார் மங்களாஶாஸனம். சத்திரத்திலிருந்து ஸ்ரீமதாண்டவனை மேளவாத்ய விருதுகளோடு பெரிய ஜீயர் மடத்திற்கு ப்ரதக்ஷணமாய் ஏளப்பண்ணிக்கொண்டு போய் ஸ்ரீசடாரி ஸாதித்து தாயார் ஸேவை. முதல் மரியாதை. கீழத்திருப்பதி (13.2.1940) அஹோபில மடம் ரெயில்வே கேட்டுக்கு முன்பே 2 யானை 2 குதிரை குடைகள் மேள வாத்ய எடுபிடி சாமான்கள் எதிர்கொள்ள சன்னிதி முகப்பில் ஸ்ரீசடாரி எதிர்கொள்ள கோவிந்தராஜன் ஸேவை. மாட வீதி வழியில் ஊர்வலம். திருமலை அஹோபில மடம் தங்குதல்,. (14.2.1940) திருவேங்கடமுடையான் கோவில் முதல் மரியாதை. ஸ்ரீமதாண்டவனுக்கு 25 அடி நீளம், 4 1/2 அடி அகலமுள்ள தகடி, குடை முதலியன வழங்கப்பட்டது. பெருமாள் சேவை. ஸ்ரீசடாரி எதிர்கொண்டது. ஊர்வலமாய் அழைப்பு ரூ 250/- செலவில்

பெருமாளுக்குத் திருக்கல்யாண உத்ஸவம். ஸ்ரீராகவாச்சார் (சர்வே) ஏற்று நடத்தி வைத்தார்.

கீழத்திருப்பதி - அஹோபில மடம் திருச்சானூர் தேவஸ்தான சத்திரம் ஹைதபல்லி ஒரு கோயில்

கல்ரோட்டுபல்லா - ஒரு பள்ளி ஹனுமந்தராயன் ஓட் சாவடி, கொத்தக் கோட்டா -பள்ளிக்கூடம், புதலப்பட்டு -சத்திரம், முத்துரேவல் பள்ளி குப்புராயர் சத்திரம், வேங்கடகிரி - பெருமாள் கோவில், மொகிலி- சத்திரம், காட்டுப்பாதை 2 ஜோடி மாடுகள் வாடகைக்கு அமர்த்தப் பட்டது. பல்மனேரி முனிவெங்கடப்பா சத்திரம், பத்திகொண்டா - தோட்டம், கொண்டராயபல்லி சாவடி, நங்கிலி ஒரு தோப்பு

**மார் ச் 1940**

கப்பல் மடுகு ஒரு கோயில், நரசிம்ம தீர்த்தம் ஒரு சத்திரம், தேவராய சமுத்திரம் ஒரு சத்திரம், தம்பே ஹல்லி - பெரிய சத்திரம் (காண்ட்ராக்டர் வரதப்பா ஸஹாயம் --ஒத்தை மாட்டு வண்டி கூட அனுப்பியது) வடகோர் காண்ட்ராக்டர் சீனிவாசய்யர் வீடு, கோலார் - ஆஞ்சநேயர் சன்னிதி, கொண்டராஜபள்ளி ஆஞ்சநேயர் சன்னிதி, நர்ஸபூர் - பெள்ளூர் ஜோடி ராமராவ் உபசரணை, முக்பால் சத்திரம் --போலீஸ் ஸ்டேஷன் ஹூஸ்கோடா பயணவிடுதி, பெளிக்யாஜஹள்ளி - பள்ளி, பெங்களூர் சிட்டி - ஏ. மாதவய்யங்கார் திருமாளிகை (3 / மைலில் தோட்டத்தில் நீராட்டம்)

கங்கேரி மண்டபம், கும்பளக்கோடு - பிரயாண விடுதி, பிடாத்தி - இராமன் சன்னிதி, க்ளோஸ்பேட் - ராம மந்திரம் சத்திரம் காகாசுர நிக்ரஹம் - பக்கத்தில் உள்ள மலையில் ஹவிஸு போட்டால் 3 மைல் விஸ்தீர்ணத்திற்கு காக்காய்கள் வருவதில்லை. மலையில் ராமனும் ஸீதையும் எழுந்தருளி இருப்பதாகச் சொல்கிறார்கள்.) ஆஞ்சநேயர் கோயில்.

மமூர்- அப்ரமேயன் ஸன்னிதி (எங்களாண்டவன் மிக உகந்த இடம் ) நிடகெட்டா - சத்திரம், மத்தூர் - ந்ருஸிம்மன் ஸன்னிதி, புகையிலை ஆலை, மாண்ட்யா- டெங்கனிக்கோட்டை சிஷ்யர் பத்திரிகை நிருபர் ராமசாமி அய்யங்கார் திருமாளிகை, துக்தா - பெருமாள் சன்னிதி திருநாராயணபுரம் ஸோஸலை ஜோடிதார் திருமாளிகை முதல் மரியாதை (17.3.1940)---செல்ல பிள்ளை --- வைரமுடி சேவை தொண்டனூர் - பெருமாள் ஸன்னிதி (உடையவர் எழுந்தருளி ஜைனர்களை ஜெயித்தது, ராஜா பிட்டிதேவன் பெண்ணுக்கு பிரஹ்ம ராக்ஷஸ் ஓட்டியது) ஆஞ்சநேயர் மடம் -

ஸ்ரீரங்கபட்டிணம் - ரங்கன் ஸேவை (எங்களாண்டவன் திருமார்பில் உள்ள முண்டில் வலி அதிகம் )

## ஏப்ரல் 1940

கரிகட்டம் மண்டியாக் கொப்பல் - இராமன் ஸன்னிதி பன்னூர்- இராமன் ஸன்னிதி உக்கிலிகரே- இராமன் ஸன்னிதி

ஜோடிதார் ரங்காச்சாரியார் மாந்தோப்பு பங்களா
ஸ்ரீரங்கனாதபுரம் - சரித்திரக்கோவில்

ஸோமனாதபுரம் - தங்கணா ஆச்சாரி கட்டிய கோவில்
ஸோஸலை - ஸோஸலை கிருஷ்ணமாச்சாரியரால் வண்டி ரிப்பேர் செய்யப் பட்டது

டி.நர்ஸிப்பூர் - அஹோபில மடம்

பல பேர் ததீயாராதனை. இந்த இடத்தில் ஸ்ரீமதாண்டவனின் திருமார்பில் இருந்த கட்டியால் வலி பொறுக்க முடியாமல்போய் எந்த சமயத்தில் வெடித்து விடுமோ என்று பயந்ததால் மைசூரிலிருந்து டாக்டர் வந்து 15-4-1940 அன்று மாலை 3 மணிக்கு ஆபரேஷன் வெகு சுலபமாய் செய்தார். ஒரு இஞ்சக்ஷன் மூலம் அந்தக் கட்டியிலிருந்து துர்நீரை வெளிப்படுத்தி அந்தப் பொந்தில் ஒரு மருந்தைப் போட்டு மூடிவிட்டார். ஆண்டவனுக்கு வலி சிரமமில்லை. ஆபரேஷன் ஆன அரை மணிக்கெல்லாம் காவேரியில் நீராட்டத்திற்கு எழுந்தருளியாயிற்று. ஸ்ரீமதாண்டவன் திருநாராயணபுரத்தில் எழுந்தருளியிருந்தபோது செல்லப்பிள்ளை எங்களாண்டவன் ஸ்வப்னத்தில் எழுந்தருளி, ஸ்ரீமதாண்டவன் பக்கத்தில் உட்கார்ந்து மார்பில் இருந்த கட்டியை வெடுக்கென பிடுங்கி எறிந்ததாக தனக்கு ஸ்வப்னம் என ஸ்ரீமதாண்டவன் சாதித்தாயிற்று. வர்த்தித்திருந்த ஹெம்பிகை இடம் பெரியாண்டவன் தலைக்காடு கொள்ளேகாலம் - பெருமாள் சன்னிதி ஸத்யாகாலம் வரதராஜப் பெருமாள் ( 12 வருஷம்

தூப்புல் தேசிகன் வர்த்தித்திருந்த இடம்) சிவசமுத்ரம் - பாலரங்கநாதப் பெருமாள் ஸன்னிதி பிளக்குவாடி - ஜோடிதார் சுந்தராச்சார் சர்கூர் -ராமமந்திரம் கிருஷ்ணாபுரம் கோவில் ஸோஸலை நதீபுரம் ரங்காச்சாரியார் திருமாளிகை டி. நர்சிபூர் -அஹோபில மடம் கஜ்ஜன ஹள்ளி - ஒரு தனி வீடு

### மே 1940

ஹெடுதலை - ஸ்ரீநிவாசாச்சாரியார் திருமாளிகை பண்டாரவாடி - ஏரிக்கரை மண்டபம் சாமராஜநகர் நாராயணன் சன்னிதி வெங்கடய்யன் சத்திரம் - கோயில் ஸ்ரீநிவாசபுரம் - காவேரிப்பாக்கம் புளிஞ்சானூர் - காட்டிலாகா வீடு டிம்பம் - பிரயாண மாளிகை பன்னாரி - பிரயாண மாளிகை சத்யமங்கலம் பெருமாள் கோவில் கொடுவேரி - ஹனுமார் கோவில் பங்கார்புதூர் - சத்திரம் -நல்லகவுண்டன்பாளையம் - கிருஷ்ணமாச்சார் திருமாளிகை கவுண்டப்பாடி சாவடி பவானி அக்ரஹாரம் (காவேரி - பவானி சங்கமம். வண்டிகள் 10மைல் சுற்றி வந்தன) ஈரோடு ஜங்ஷன் வக்கீல் சுதர்சனாச்சாரியார் திருமாளிகை சாவாடிப்பாளையம் - சாவடி கணபதிபாளையம் பள்ளி கோளாநெல்லி பெருமாள் கோவில் கொடுமுடி - விளக்குடி ரங்கநாதய்யங்கார் திருமாளிகை சத்திரம் வெள்ளிக்கிழமை சத்திரம் - சத்திரம் கரூர்- சர்க்கிள் இன்ஸ்பெக்டர் ஸ்ரீநிவாஸகோபாலய்யங்கார் திருமாளிகை, புலியூர் - கோவில், மணவாசி - செல்லம் அய்யங்கார் திருமாளிகை, மஹாதானபுரம்-ஸ்டேஷன் அருகிலுள்ள பாடசாலை, குளித்தலை - அக்ரஹாரம் திருப்பராய்த்துறை -

குணசீலம் பெருமாள் -- முக்கொம்பு ஆஞ்சனேயர் - மங்களாஶாஸனம். பெரியாச்ரமம் ஸ்ரீரங்கம்.

## ஸ்ரீமதாண்டவன் யாத்திரை (1936 1940)

நவ. 1936 - டிசம்பர் 1936.

43 மைல் ஸ்ரீரங்கத்திலிருந்து புதுக்கோட்டை பிப். 1937 - மார்ச்சு 1937. 30 மைல்

புதுக்கோட்டையிலிருந்து அரியக்குடி 4-10-1937 – 3-7-1938. 617மைல். அரியக்குடியிலிருந்து ஸ்ரீரங்கம். வழி: இராமநாதபுரம் நவதிருப்பதி --திருக்குறுங்குடி --வானமாமலை --திருநெல்வேலி சங்கரன்கோவில் -- ஸ்ரீவில்லிபுத்தூர் - மதுரை --காரைக்குடி - புதுக்கோட்டை.

22.4.1939 முதல் 23.5.1939 வரை 230 மைல் ஸ்ரீரங்கத்திலிருந்து காஞ்சி.

21.10.1939 முதல் 30.5.1940 வரை 731 மைல் காஞ்சீயிலிருந்து ஸ்ரீரங்கம் - (வழி புத்தூர், திருப்பதி, பங்களூர், திருநாராயணபுரம், சத்யாகாலம், டிம்பம், ஈரோடு, கரூர், குழித்தலை.)

இது தவிர அவ்வப்போது யாத்திரையாய் எழுந்தருளி தேரழுந்தூர், திருநகரி, நாகப்பட்டிணம் சமீபமுள்ள பாப்பாகோவில், கீழையூர், சாக்கை, எம்பிளச்சேரி, விளக்குடி, மன்னார்குடி, வழுத்தூர், விண்ணாற்றங்கரை, முதலிய இடங்களில் இருந்து கொண்டு சாதுர்மாஸ்ய ஸங்கல்பங்களை அனுஷ்டித்தருளினார்.

## எங்களாண்டவன்

## ஸ்ரீ ஆக்கூர் ஆண்டவனிடம் காலக்ஷேபம் செய்த மஹான்கள்

ஸ்ரீ ஸ்வச்சன்னம் வீரராகவாசார்யர், ராஜகோபாலா சார்யர், திருக்குடந்தை வேதாந்தாசார்யர், தென்பரை வெங்கடவரதாசார்யர்(தென்பரை ஆண்டவன்), திருக்குடந்தை ஸ்ரீநிவாஸ ராகவாசார்யர் (திருக்குடந்தை ஆண்டவன்), ஸாரநாதாச்சார், திருநாராயணய்யங்கார், ஸ்ரீநிவாஸாச்சாரியார், ரெங்கசாமி ஐய்யங்கார், விஜயராகவா சாரியார், பட்டு ராமானுஜாசாரியார், தில்லைஸ்தானம் ஸ்ரீநிவாஸரங்காச்சார், தில்லைஸ்தானம் ஸுந்தராச்சார், நெடுந்தெரு ரெங்காச்சாரி, வெளிப்பாளையம் க்ருஷ்ணமாச்சார், குறிச்சி தாத்தாச்சார், நரசிம்மாச்சார், சாக்கை வரதாச்சார், சாக்கை கோபாலஸ்வாமி அய்யங்கார், சாக்கை பார்த்தஸாரதி அய்யங்கார், சாக்கை ராமஸ்வாமி அய்யங்கார், கரியாப்பட்டினம் கஸ்தூரி ரங்காச்சார், கரியாப்பட்டினம் நரஸிம்மாச்சார், கரியாப்பட்டினம் ராமஸ்வாமி அய்யங்கார், கரியாப்பட்டினம் திருவேங்கடாச்சார், கரியாப்பட்டினம் ஆராவமுதாச்சார், விளக்குடி ரெங்கராஜய்யங்கார், வடுவூர் திருநாராயணய்யங்கார், தஞ்சாவூர் ஏ நரசிம்மாசார், எஸ் ராகவாச்சார், நெடுந்தெரு ராகவாச்சார், மாளாபுரம் ஸ்ரீநிவாஸாசார்யர், அம்மூர் நரசிம்மாசார்யர், சிங்கப்பெருமாள் கோவில் சுந்தராசார்யர், கஸ்தூரி ரங்காசார்யர், கண்ணாங்குளம் ஸ்ரீநிவாஸ ராகவாசார்யர், மைஸூர் ராமசந்த்ராசார்யர், மைஸூர் லக்ஷ்மீ நரசிம்மாசார்யர், புதுக்கோட்டை திவான் க்ருஷ்ணமாசார்யர், புதுக்கோட்டை

ஜட்ஜ் ஸ்ரீநிவாஸாசார்யர், புதுக்கோட்டை ராகவாசார்யர், புதுக்கோட்டை ஸ்ரீநிவாஸ கோபாலாசார்யர், மேலமங்கலம் ராகவ தாதாசார்யர், அரியக்குடி ரகுநாதாசார்யர், உத்தண்டி ஸ்ரீ நிவாஸாசார்யர், திருவேங்கடாசார்யர், காடந்திருத்தி ரங்காசார்யர் தில்லையம்புதூர் ராமானுஜாசார்யர், திருக்கோட்டியூர் க்ருஷ்ண தாதாசார்யர், மதுரை அண்ணாதுரை அய்யங்கார், வி. கே. ஸ்ரீநிவாஸாசார்யர், பாதூ பி எஸ் ராமானுஜாசார்யர், கோனேரி ராஜபுரம் ராகவாசார்யர், மன்னார்குடி ஸ்ரீரங்காசார்யர், வெண்ணாற்றங்கரை க்ருஷ்ணமாசார்யர், ஸோஸலை ஸ்ரீஶைலாசார்யர், வழுத்தூர் ரங்கநாத தீக்ஷிதர், சாக்கை வேந்தாந்த ராமானுஜாசார்யர், மன்னார்குடி ஸ்ரீநிவாஸ கோபாலாசார்யர் இன்னும் பல வ்யாபக வித்வான்கள். ரஹஸ்ய க்ரந்த காலக்ஷேபம் பகவத் விஷயம் இவற்றிற்கு பல வித்வான்கள் தர்ம பத்நீகளுடன் அந்வயிப்பர்.